வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 30.04.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 121 பக்கங்கள் : 12

# நாட்டில் மீளவும் இருண்ட யுகம்!

## மின் பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 30

நாட்டின் மின்சார கட்டமைப்பை இருண்ட யுகத்துக்குத் தள்ளும் வகையில் உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மின் கட்டணத்தை தீர்மானிக்கும் உரிமையை தனியார் நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் முயற்சிப்பது முறையற்றது - இவ்வாறு மின்சார சபையின் மின் பொறியியலாளர் சங்கம் போர்க்கொடி தூக்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை மின் பொறியியலாளர் சங்கத்தின் காரியாலயத்தில் அதன் தலைவர் தனுஷ்க பராக்ரம நேற்றுத் திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது 11

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி!

முல்லைத்தீவு, ஏப். 30

மரத்தின் கீழ் நின்றவர்களை மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு - ஐயங்கன்குளம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான காளிமுத்து சரவணராஜா (வயது 49) என்பவரே உயிரிழந்தார்.

இவர் முன்னாள் போராளியுமாவார். இதேநேரம், மகேந்திரன் பிரபாகரன் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தார். அவர், மல்லாவி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ)

## த. தே. கூ. முன்னாள் எம். பி. ஈழவேந்தன் காலமானார்



யாழ்ப்பாணம், ஏப். 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மா. க. ஈழவேந்தன் தனது 91ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

வயது மூப்பு மற்றும் சுகயீனம் காரணமாக 11

## "பொதுஜன பெரமுன மீது எனக்கு பெரும் ஏமாற்றம்"

கொழும்பு, ஏப். 30

பொதுஜன பெரமுன மீது தாம் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக அக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை புத்ததாச விளையாட்டரங்கில் 11

## கடும் மின்னல் தாக்கம் மக்களே அவதானம்

கொழும்பு, ஏப். 30

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடும் மின்னல் தாக்கம் ஏற்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல், மத்திய, தென், சப்ரகமுவ, ஊவா, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை மற்றும் பலத்த மின்னலுக்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது அந்த பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று 11

## எரிக் சொல்ஹெய்ம் இன்று யாழ். வருகிறார்



யாழ்ப்பாணம், ஏப். 30

எரிக் சொல்ஹெய்ம் இரு நாள் பயணமாக இன்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

2002இல் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளுக்கு நோர்வேயின் சமாதான தூதுவராக சொல்ஹெய்ம் பணியாற்றியிருந்தார். இவர், தற்போது 11

## ரணிலும் மைத்திரியும் இரகசியமாக சந்திப்பு

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இரகசியமாக சந்தித்து உரையாடியுள்ளனர் என்று அறிய வருகின்றது.

மைத்திரிபால சிறிசேன, அண்மைக்காலமாக அரசியல் ரீதியாக கடும் நெருக்கடிகளையும் அவை தொடர்பில் வழக்குகளையும் எதிர்கொண்டு வருகின்றார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து 11

## வேலையில்லா பட்டதாரிகள் யாழில் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 30

அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நேற்றுக் காலை இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஏமாற்றாதே ஏமாற்றாதே பட்டதா ரிகளை ஏமாற்றாதே, வேண்டும் வேண்டும், வேலைவேண்டும், நாசம் 11

## போலி ஆவணம் மூலம் சிறுவனை லண்டனுக்கு கடத்த முயன்ற பெண்!

கொழும்பு, ஏப். 30

இங்கிலாந்தில் வசிக்கும் இலங்கை தாய் மற்றும் அவரின் மகனின் தகவல்களை பயன்படுத்தி போலி ஆவணங்களை தயாரித்து, 17 வயதுடைய சிறுவனை இங்கிலாந்துக்கு அழைத்துச்

### முல்லைத்தீவு பகுதியை சேர்ந்த இருவர் கட்டுநாயக்கவில் கைது

செல்ல முயன்ற இரண்டு பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரு சிறுவனுடன் இங்கிலாந்துக்கு செல்வதற்காக கட்டுநாயக்க 11

## ஜனாதிபதித் தேர்தலில் சு. கவின் சார்பில் வேட்பாளரை களமிறக்குவது கேலிக்கூத்து

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரை களமிறக்குவது கேலிக்கூத்தானது என்று அக்கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கட்சியை மறுசீரமைப்பதற்கு 11



## "வாக்குறுதி தவறினார் கோட்டா"

கொழும்பு, ஏப். 30

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தவறிவிட்டனர் என கொழும்பு பேராயர் இல்லத்தின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து குறுந்தகவல் ஒன்றை அனுப்பியிருந் தார்.

"ஈழநாடு பத்திரிகை தமிழ் பொது வேட்பாளருக்காக எழுதுவதாகத் தெரிகின்றது. இது பத்திரிகை ஆசிரியரின் பார்வையா அல்லது உங்களின் நிலைப்பாடும் அதுவா?" என்று கேட்டிருந்தார் நண்பர்.

அவரோடு அதுபற்றி நீண்ட நேர மாகப் பேசியபோது அவரிட மிருந்த வந்த பல கேள்விகள் பொதுவாக பலரிடமும் இருப்பவைதான். அவர் கேட்ட முதலா வது கேள்வி, "இது சாத்தியமாகும் என்று நம்புகின்றீர்களா?" என்பதுதான்.

"சாத்தியமாகாது என்பது நமது நம்பிக்கையாக இருக்கமுடியாதே", என்றேன்.

ஏற்கனவே குமார் பொன்னம்பல மும் சிவாஜிலிங்கமும் பரீட்சித்துப் பார்த்ததுதானே என்று பலரும் கேட்கின்றனர். குமார் பொன்னம்ப லம் தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாக எழுபத்தியேழில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதற் காக எதனையும் செய்யவில்லை என்று தமிழ்த் தரப்புமீதே குற்றச் சாட்டை முன்வைத்து அதற்கு எதி ராக தான் போட்டியிடுகிறேன் என்று கூறி போட்டியிட்டார். அவர் ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிட்ட முத லாவது தமிழ் வேட்பாளரே தவிர, அவர் தமிழர்களின் குரலாக ஒரு பொது கோரிக்கைக்காக போட்டி யிட்ட தமிழ் பொது வேட்பாளர் அல்ல. தமிழ் வேட்பாளர் என்பதற் கும் தமிழ் பொது வேட்பாளர் என்ப தற்கும் உள்ள வேறுபாட்டை பலரும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

சிவாஜிலிங்கம் எதற்காக போட்டி யிட்டார் என்பது அவருக்கே தெரிந் திருக்குமோ தெரியவில்லை. அவர் தான் அங்கம் வகித்த ரெலோ கட்சிக்கே தெரியாமல் வேட்புமனு தாக்கல் செய்த ஒருவர். அவரைப் பற்றிய அல்லது அவர் போட்டியிட்டது பற்றிய விடயத்தையும் இந்த பொது வேட்பாளர் பற்றி விடயத்தையும் ஒப்பிட்டு கதை சொல்பவர்கள் அரசியலில் அரிச்சுவடி தெரியாதவர் களாகவே இருக்கமுடியும்.

லண்டன் நண்பரிடம் கேட்டேன்: "தமிழ் மக்கள் என்ன செய்யலாம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" என்று.

அவர் சொன்னார், இருக்கின்ற மூன்று வேட்பாளர்களில் அதிகபட் சமாகத் தமிழ் மக்களுக்கு யாரால் நன்மை என்று பார்த்து அவர்களை ஆதரிக்கலாம்தானே?.

மூன்று வேட்பாளர்களில் ஒருவர் அண்மையில் தமிழ் கட்சி ஒன்றின் தலைவரை சந்தித்து பேசியபோது சொன்னாராம், "தமிழர்களுக்கு இப் போது சரியான அரசியல் பிரதிநிதித் துவம் இல்லை. தமிழ் மக்கள் மத்தி யில் இப்போது இருப்பதெல்லாம் சிறிய சிறிய அரசியல் குழுக்கள்தான்" - இவருக்கு தமிழ் மக்கள் தாம் யார் என்று எப்படி காட்டவேண்டும்" என்று நண்பரிடம் கேட்டேன்.

அந்த நண்பர் எப்போதும் பதின் மூன்றை அமுல்படுத்த வேண்டும் என்றும் அதற்கு ஆதரவான கருத் தைக் கொண்டவர் என்பதை நான் அறிந்திருந்ததால் அவரிடம் கேட் டேன், "ஆகக்குறைந்தது இந்த பதின் மூன்றை முழுமையாக அமுல்படுத் துவோம் என்று எந்த வேட்பாளரா வது சொல்வதற்குத் தயாராக இருக்கி றார்களா?" என்று.

அவர் உடனே சொன்னார்: "ஜே. வி. பி. சொல்கிறதுதானே?" என்று. எங்கே சொன்னது என்று கேட்டேன். "லண்டன் வந்திருந்த போது ஹரிணி என்னிடம் நேரடியாக சொன்னாரே" என்றார். உங்களிடம் தனிப்பட்ட வகையிலும் அல்லது கனடாவில் தனது நண்பர் ஒருவரிடம் தனிப்பட்ட முறையில் சொல்கின்ற அவர்கள் ஏன் இலங்கையில் பகிரங்க மாக இதுவரை ஓரிடத்தில்கூட சொல்லவில்லை?" என்று கேட்டதற்கு அவரிடம் பதில் இல்லை. சஜித்கூட பதின்மூன்றை அமுல்படுத்துவேன் என்கிறாரே தவிர, அதனை முழுமை யாக என்று சொல்ல தயக்கம் காட்டு கிறார் என்றே தெரிகின்றது என்றேன்.

இப்போது அவரது முக்கிய கேள்வி இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைக்கமுடியுமா? என்பதுதான்.

"இது ஓர் அரசியல் நடவடிக்கை. நிச்சயமாக அரசியல் கட்சிகளின் ஆதரவு அவசியம். ஆனால், அந்த விடயத்தில் தமிழ் மக்கள் அனைவ ரும் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளரை அவர் யாராக இருந்தாலும் அவரை ஆதரிக்க தயாராகி விட்டால் அரசியல் கட்சிகள் மக்களின் விருப்பத்துக்கு மாறாக செயல்பட விரும்புமா என்பது தெரியவில்லை. முதலில் தமிழ் மக்களை அந்த விடயத்தில் ஒரு புள்ளியில் சந்திக்கச் செய்ய வேண்டும். அதற்காகவே இப்போது பல்வேறு தரப்பினரும் முயன்று கொண்டிருக்கின்றனர்.

இந்தத் தேர்தலை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை எடுத்துச் சொல்கின்ற ஒரு களமாக பயன்படுத் தும் அதேவேளை, இது அனைத்து தரப்பினரையும் ஓரணியாக- அவர் களை ஒரு தேசமாக ஒன்றிணைக்கவும் செய்யும். இது அனைத்து தரப்பின ரையும் இணைக்கின்ற முக்கிய வேலையையே செய்யும். செய்ய வேண்டும்." என்றேன்.

அரசியல் கட்சிகள் ஒவ்வொன் றுமே ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுக் கும் ஒவ்வொரு விருப்பம் இருக்க லாம். அதைவிட முக்கியமானது அதன் தலைவர்களும் ஏற்கனவே இது விடயத்தில் ஒரு முடிவைக்கூட எடுத்திருக்கலாம். ஆனால், மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் மக்களின் விருப்பத்துக்கு மாறாக கட்சிகளால் முடிவெடுக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே.

கடந்த தேர்தலில் கோட்டாபயவுக்கு வாக்களிக்க விரும்பாத தமிழ் மக்கள் அவரை எதிர்த்து போட்டியிட்ட சஜித்துக்கே வாக்களிப்பார்கள் என்பதை தெரிந்துவைத்திருந்த நமது கட்சிகள் தாமும் அவரை ஆதரிக்க முடிவெடுத் தனவே தவிர, கொள்கையளவில் அவரை ஆதரிக்கவில்லை. அந்தத் தேர்தலில் தமிழ் பொதுவேட்பா ளரை நிறுத்த தமிழ் மக்கள் பேரவை முயன்றபோது அது மக்கள் மயப் படுத்தப்பட்டிருந்தால் அப்போதே அந்த முயற்சி வெற்றியளித்திருக் கலாம்.

நிலைமைகளை அவருக்குக் கூறிக்கொண்டிருந்தபோது அவரும் அந்த முயற்சி வெற்றிபெறவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருப்பார் என்றே தெரிந்தது.

அவர் கடைசியாகக் கேட்டார், இரண்டுபட்டு நிற்கும் தமிழ் அரசு ஒரு பொது முடிவுக்கு வரும் என்று நினைக்கிறீர்களா? என்று.

இதற்கு பதிலளிப்பதென்றால் இன்னும் ஒருமணி நேரம் பேசவேண்டிவரும் சந்தர்ப்பம் கிடைத்தால் பின்னர் பேசுவோம் என்று தொடர்பைத் துண்டித்தேன்.!

**- ஊர்க்குருவி.**

# போர் கால ஊடகவியலாளர் சுரேனின் 'போரின் சாட்சியம்' நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஏப். 30

இறுதிப் போரில் பணி யாற்றிய ஊடகவியலாளர் சுரேன் கார்த்திகேசு எழுதிய "போரின் சாட்சியம்" நூல் வெளியீட்டு விழா நிகழ்வு கனடாவின் வன்கூவரில் நடைபெற்றது.

துசாந்தன் சிவரூபன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. தமிழ் வணக்கப்பாடல் மற்றும் எம். வி. சன்சி கடல் வணக்கப்பாடலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

இன அழிப்பு செய்யப்பட்டவர் களுக்கான நினைவேந்தல் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. சுடரை கந்தையா பாலசுப்பிரமணியம் ஏற்றியை ராதா நிகழ்த்தினார்.

முள்ளிவாய்க்கால் நினைவுக் கவி தையை அட்சரா வரதராசா நிகழ்த்தி னார். நூலை இறுதிப் போரின்போது மூன்று பிள்ளைகளையும் கணவரையும் பறிகொடுத்த சாந்தி வெளியிட்டு வைக்க இளைய தலைமுறையின் சார்பில் போர் காலத்தில் குழந்தையாக வாழ்ந்த அபி சுவேந்திரகுமார் பெற்றுக்கொண்ட துடன் சிறப்புரையையும் ஆற்றியிருந் தார்.

"போரின் சாட்சியம்" நூலின் முதல் பிரதியை கனடாவின் முடியரசு - பழங் குடிகள் உறவுகள் அமைச்சர் ஹறி ஆனந்த சங்கரியிடம் நூல் ஆசிரியர் கடந்தவாரம் கையளித்திருந்தார்.

சுரேன் கார்த்திகேசு ஈழநாதம் பத்திரி கையின் அலுவலக செய்தியாளராகவும் பக்கவடிவமைப்பாளராகவும் பணியாற் றியிருந்தார். ஏப்ரல் மாதம் முல்லைத்தீவின் வலைஞர்மடத்துக்கும் இரட்டைவாய்க்காலுக்கும் இடைப்பட்ட பகுதியில் பணி நிமித்தம் சென்றபோது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன் றில் சிக்கி படுகாயம் அடைந்திருந்தார்.

போரின் பின்னர் தாய்லாந்தி லிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற சன் சீ கப்பல் மூலம் அகதியாக கனடாவைச் சென்ற டைந்திருந்தார். கடல் பயணத்தின்போது, ஏற்கனவே அடைந்திருந்த காயத்தின் பாதிப்புகளாலும் கப்பலில் போதிய மருத்துவ வசதிகள் இன்மையாலும் உயிரா பத்தையும் எதிர்கொண் டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொது வேட்பாளரா? பகிஷ்கரிப்பா? ஆராய்ந்து முடிவெடுப்பது அவசியம்!

## பேராசிரியர் ரகுராம் தெரிவிப்பு

வடமராட்சி, ஏப். 30

பொது வேட்பாளர், பகிஷ்கரிப்பு இரண்டும் ஒரு புள்ளியில்தான் சந்திக்கின்றன. இதில் எது மிகச்சரியானது என விஞ் ஞானபூர்வமாக அரசியல் பூர்வ மாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் நாம் இருக்கிறோம் -என்று யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வடமராட்சி ஊடக இல் லத்தில் ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 19ஆவது ஆண்டு நினை வேந்தலில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

எந்தக் கட்டத்திலும் சிங்கள அரசியல் சக்தி களை, சிங்கள அரசியல் வாதிகளை அடுத்து வரக் கூடிய ஆளும் தரப்புக ளை நாங்கள். நம்பவே முடியாது என்பதை அன்றிலிருந்து இன்று வரை வரலாறு எங்க ளுக்கு திரும்பி திரும்பி திரும்பி சொல்லி வந்தா லும்கூட அதை மறுத்து நாங்கள் குறுக்கு ஒட்டம் ஓடுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

சிங்களவர்களை நாம் மாற்ற முடியாது. சிங்கள அரசியல்வா திகளை நாம் மாற்ற முடியாது, சிங்கள அரசியல் சூழலை நாம் மாற்ற முடியாது. என்ற ஒரு தெளிந்த நிலைப் பாட்டில் சிவராம் இருந்தார்.

அது புத்திஜீவிகளாக இருக்கலாம். அரசியல் கட்சிகளாக இருக்கலாம். அல்லது சமூக செயல் பாட்டாளர்களாக இருக் கலாம். அவர்களுக்கு ஏதோ ஒரு வரையறை அவர்களுக்குள் ஆழமாக. அவர்களுக்குள் இறுகி யிருக்கக்கூடிய கருத்தி யல் தளத்துக்கு அப்பால் அவர்கள் எங்களுக்காக சிந்திப்பார்கள் அல்லது எங்களுடைய நியாயங் களை ஏற்றுக்கொள்வார் கள் என்பது எல்லாம் ஒரு பொய்க் கதை என்பதை அவர் மிகத்தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தார். இன்றைக்கு நாங்கள் அந்த சந்தியில்தான் மீண்டும் வந்து நிற்கின்றோம்.

இதை அடிப்படை யாக வைத்துப் பார்க்கும் போது, "நாங்கள் யாரை யும் நம்ப முடியாது. யாருக்காகவும் எங்களு டைய பெறுமதியான வாக்குகளை அளிக்கவும் முடியாது. எனவே, பொது வேட்பாளர் அல்லது பகிஷ்கரிப்பு என்பவை நம் முன்னுள்ள தெரிவு கள். இதில், எது சரியா னது என் பதை என்பதை நாங்கள் விஞ்ஞான ரீதி யாக - அறிவியல்பூர்வ மாக செய்யவேண்டும். உண்மையில் இந்த இரண்டு நிலைப்பாடுக ளுமே ஒரு ஒருமித்த புள்ளியில்தான் இருப்ப தைத்தான் நான் உணர்ந்து பார்க்கிறேன்.

ஆனால், நிச்சயமாக சிங்கள அரசியல் சக்திக ளுக்காக நாங்கள் எப்போ துமே ஆதரவாக இருக்க முடியாது. அது தவறான வழிகாட்டலாகத்தான் இருக்கும் - என்றார். (02)

# அநாதரட்சகனின் சிறுகதை தொகுதி அறிமுக நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஏப். 30

மூத்த முற்போக்கு எழுத்தாளரும் ஓய்வுநிலை உதவிக் கல்வி பணிப்பாள ருமான மு. அநாதரட்சகன் எழுதிய "பின் தொடரும் வலி" சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு எதிர்வ ரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை யின் கவிஞர் முருகையன் கேட் போர்கூடத்தில் "தாயகம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. தணி காசலம் தலைமையில் இந்த நிகழ்வு நடை பெறும்.

இந்த நூல் அறிமுக நிகழ்வில் வாழ்த்துரைகள் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்து லிங்கம், நூல் அறிமுகவு ரையை மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா ஐ. சாந்தன், நூல் மதிப்பீட்டுரைகளை ஆசிரியர் சிறீலேக்கா பேரின்பகுமார், தர்க்கா நகர் கல்வியியல் கல்லூ ரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன் பதிலுரையை நூலாசி ரியர் மு. அநாதரட்சகன் ஆகியோர் ஆற்றுவர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
30.04.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், சித்திரை 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஓர் அரசியல் நோய் பற்றி...

பொதுவாக இலங்கை அரசியலில் அவ்வப்போது சதிக்கோட்பாடுகள் தலைநீட்டுவதுண்டு. அதிகாரத்தில் இருப்பவர்கள் வீழ்ச்சியை சந்திக்கும்போதெல்லாம் தங்களின் வீழ்ச்சிக்கான காரணங்களை சதிக்கோட்பாடுகளில் தேடுவதுண்டு. 2015இல் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டபோது அவர் சதிக்கோட்பாடுகளில்தான் தனது தோல்விக்கான காரணத்தைத் தேடினார். உண்மையில், அவர் தனது தோல்விக்கான காரணத்தை தனது அரசியல் தவறுகளிலிருந்து தேடியிருக்க வேண்டும்.

இதேபோன்றுதான் அவரது சகோதரரும் சிங்கள மக்களின் எழுச்சியின் குறியீடாகவும் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அறகலய-சிங்கள மக்கள் கிளர்ச்சியால் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டதற்கு பின்னால் சதிகள் இடம்பெற்றன என்று இப்போது கூறுகின்றார். பொதுவாகவே அதிகாரத்திலிருந்து அகற்றப்படுபவர்கள் இவ்வாறான சதிக் கதைகளை புனைவது இலங்கை அரசியலில் இயல்பானது. இதேபோன்றுதான் இப்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல கதைகளைக் கூறுகின்றார். அவர் இதற்கு முன்னரும் இவ்வாறான பல கதைகளைக் கூறியிருக்கின்றார்.

சதிக் கோட்பாடுகள் ஏன் தேவைப்படுகின்றன? பொதுவாக தங்களின் தவறுகளை மறைக்க முற்படுபவர்கள் மற்றும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை நியாயமான காரணங்களை முன்னிறுத்தி எதிர்க்கும் வல்லமை இல்லாதவர்களே பொதுவாக இவ்வாறான சதிக் கோட்பாடுகளில் சரணடைவதுண்டு. தமிழர் அரசியல், மிதவாத அரசியலிலிருந்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்த காலத்திலிருந்து சதிக்கோட்பாடுகளும்கூடவே வளர்ந்துவந்தன. ஒவ்வொரு காலகட்டத்திலும் அன்றைய ;சூழ்நிலைக்கு ஏற்றவாறு இவ்வாறான சதிக் கதைகள் மேலோங்கின. இந்தியாவின் நேரடியான தலையீட்டைத் தொடர்ந்து அனைத்துக்கும் பின்னால் இந்திய உளவுத் துறை இருப்பதான கதைகள் தாராளமாகவே புனையப்பட்டன. அதன் நீட்சியே இப்போதும் அவ்வப்போது தமிழர் அரசியல் பரப்பில் தலைகாட்டுகின்றது. தர்க்கரீதியில் ஒரு விடயத்தை எதிர்கொள்ளும் ஆற்றலை இழந்துபோகும் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் என்போர் மற்றும் ஊடகத்தரப்புகள் (சிலர்) உடனடியாகவே இந்திய உளவுத் துறை சதிக்கதைககளில் சரணாகதியடைந்து கொள்கின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினைந்து வருட காலத்தில் எந்தவொரு முன்னேற்றமும் அரசியலில் இடம்பெறவில்லை. ஆனால், சதிக் கதைககள் தாராளமாகவே சொல்லப்பட்டன. ஆனால், இந்தக் சதிக்கதைகளால் எதனையாவது சாதிக்க முடிந்ததா என்றால் பதில் பூச்சியமாகும்.

ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் - இன்றைய அரசியல் நெருக்கடியை கடப்பதற்கு இதுதான் சரியானதோர் உபாயம் என்று கூறுகின்றபோது, அதே சதிக்கதைகளுடன் சிலர் தலையை நீட்டுகின்றனர். இதற்கு பின்னால் யாரோ இருக்கின்றார் - இது யாரையோ வெற்றிபெறச் செய்வதற்கான தந்திரம் - இப்படியான சதிக் கதைகள் எட்டிப்பார்க்கின்றன. உண்மையில், இவ்வாறு கூறுபவர்கள் எவரிடமும் ஏன் ஒரு தமிழ் பொது வேட்பாளர் தேவையில்லை - ஏன் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க வேண்டும் என்னும் கேள்விகளுக்குப் பதில் இல்லை. அனைத்துக்கும் பின்னால் யாரோ இருக்கின்றனர் என்னும் வாதத்தை முன்வைக்க முற்பட்டால், அனைத்தையும் சந்தேகத்துடன்தான் நோக்க வேண்டியிருக்கும். இறுதியில் தமிழர்களிடம் சந்தேகங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும்.

# ரியூப் லைட்டை மென்று விழுங்கிய கைதி வைத்தியசாலையில் அனுமதி

*கொழும்பு, ஏப். 30*

*தும்பறை சிறைச்சாலையில் ஐந்து வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதி ஒருவர் ரியூப் லைட்டை உடைத்து மென்று விழுங்கியதால் சிகிச்சைக்காகக் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*கம்பளையில் வசிக்கும் 42 வயதான இவர் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவராவார்.*

*வயிற்றில் ஏற்பட்ட எரிவு மற்றும் வலி காரணமாக இவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது வயிற்றின் ஸ்கான் பரிசோதனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் தன்னை அறையொன்றுக்கு அழைத்துச் சென்று, தன்னிடம் கையடக்கத் தொலைபேசி இருக்கிறதா என்று விசாரித்துத் தாக்கியதாக சிறைக்கைதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.* *(அ)*

# பிணையில் விடுதலையானவர் போதைப்பொருளுடன் கைது!

*கொழும்பு, ஏப். 30*

*பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் ஒருவர் ரம்புக்கணை மாகொல்லவத்த சந்தி பிரதேசத்தில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.*

*ரம்புக்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இவர் 2022 ஆம் ஆண்டு அ/ஹங்கல்ல பிரதேசத்தில் ஹோட்டலுக்கு அருகில் வைத்து இருவரை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவராவார்.*

*இதேவேளை, 2017ஆம் ஆண்டு எம்பிலிப்பிட்டிய கொடக்காவெல பிரதேசத்தில் விலை மதிப்பற்ற மாணிக்கக் கற்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் மற்றும் ராகம பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு 78 இலட்சம் ரூபா பெறுமதியான வான் ஒன்றை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பிலும் சந்தேகத்தின் பேரில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தாகவும் விசேட அதிரடி படையினர் தெரிவித்துள்ளனர்.*

*மேலும், சந்தேகநபரிடம் இருந்து 820 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபரை ரம்புக்கணை பொலிஸாரிடம் விசேட அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளனர்.*

*(அ)*

# மருமகனின் கத்திக்குத்துக்கு இலக்காகி மாமியார் மரணம்!

*கொழும்பு, ஏப். 30*

*மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நக்கல பகுதியில் மருமகனின் கத்திக் குத்துக்கு இலக்காகி மாமியார் உயிரிழந்துள்ளதுடன் மனைவி படுகாயமடைந்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*உயிரிழந்தவர் மொனராகலை - நக்கல பகுதியைச் சேர்ந்த 44 வயது பெண்ணாவார்.*

*குடும்ப தகராறு எல்லை மீறியதில் சந்தேக நபர் தனது மாமியாரையும் மனைவியையும் கத்தியால் குத்தித் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*காயமடைந்த மாமியார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மனைவி மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# பாகிஸ்தானிலிருந்து மீண்டும் பெரிய வெங்காயம் இறக்குமதி!

*கொழும்பு, ஏப். 30*

*பெரிய வெங்காய இறக்கும தியாளர்கள் பாகிஸ்தானிலிருந்து மீண்டும் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அத்தியாவசிய உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.*


*இதன்படி, குறித்த வெங்கா யம் நாட்டுக்கு இறக்குமதி செய் யப்பட்டவுடன் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அவற் றைச் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.*

*தற்போது புறக்கோட்டை பொதுச் சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*இதன்படி, அதன் சில்லறை விலை 200 ரூபாவாக பதிவாகியுள்ளது.*

*இதேவேளை, கடந்த காலங் களில் இந்தியா மற்றும் பாகிஸ் தான் பெரிய வெங்காயத்திற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட தன் காரணமாக ஒரு கிலோகி ராம் பெரிய வெங்காயம் 700 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.* *(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். சகிப்புத்தன்மை தேவைப்படும்.

**மிதுனம்**

மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**கடகம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் உங்கள் செல்வாக்கு கூடும்.

**சிம்மம்**

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**

எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**துலாம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**மகரம்**

விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**மீனம்**

உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும்.

# ஐ. எஸ். ஆதரவாளர் கைதை கண்டித்தே கோவை குண்டுவெடிப்புக்கு திட்டமாம்!

சென்னை, ஏப். 30

ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பின் ஆதரவாளரான முகமது அசாருதீன் கைது செய்யப்பட்டமையை கண்டிக்கும் விதமாகவே கோவையில் குண்டுவெடிப்பு சம்பவத்தை நடத்த ஐ. எஸ். அமைப்பினர் திட்டமிட்டிருந்தனர் என்று தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கூடுதல் குற்றப் பத்திரிகையில் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22ஆம் திகதி கோவை கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோயில் முன்பாக காரில் குண்டு வெடித்தது. இதில், ஐ. எஸ். அமைப்பின் ஆதரவாளரான ஜமேஷா முபீன் என்பவர் உயிரிழந்தார். இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கில் இதுவரை 14 பேர் கைது செய்தனர். 14ஆவது குற்றவாளியாக கைது செய்யப்பட்டுள்ள தாஹா நசீருக்கு எதிராக பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஏற்கெனவே இரு குற்றப்பத்திரிகைகளை அதிகாரிகள் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் கூடுதல் குற்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

கடந்த 2019ஆம் ஆண்டு ஐ. எஸ். அமைப்பின் முக்கிய ஆதரவாளரான முகமது அசாருதீன் கைது செய்யப்பட்டமையை கண்டிக்கும் விதமாகவே கோவையில் குண்டுவெடிப்பை நிகழ்த்த திட்டமிட்டதாகவும், இதற்காக உமர் பரூக் சத்தியமங்கலம் வனப்பகுதியில் ஐ. எஸ். ஆதரவாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(ஐ)

# நடிகர் பிரகாஷ்ராஜுக்கு “அம்பேத்கர் சுடர்” விருது

## அறிவித்தது விடுதலை சிறுத்தைகள்

சென்னை, ஏப். 30

நடிகர் பிரகாஷ்ராஜுக்கு “அம்பேத்கர் சுடர்“ விருது அறிவித்துள்ளது விடுதலை சிறுத்தைகள் கட்சி.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழகம் மற்றும் இந்திய அளவில் ஆண்டுதோறும் பல்வேறு தளங்களில் சாதனைகள் படைத்த சான்றோருக்கு விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறோம்.

அந்த வரிசையில் 2024 ஆம்



ஆண்டுக்கான விருதுகள் பெறும் சான்றோரின் பட்டியலை வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம். இந்த ஆண்டுக்கான “அம்பேத்கர் சுடர்“ விருதை திரைப்படக் கலைஞரும், மத சார்பின்மைக்காக சமரசமில்லாமல் போராடி வருபவருமான பிரகாஷ்ராஜுக்கு வழங்குகிறோம் - என்றுள்ளது. (ஐ)

# 31 ஆண்டுகள் நிறைவில் ம. தி. மு. க.

சென்னை, ஏப். 30

ம. தி. மு. கவின் 31ஆம் ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சி கட்சி தலைமையகத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ம. தி. மு. க. தலைமையகம் வெளியிட்ட அறிவிப்பில்,

ம. தி. மு. கவின் 31ஆம் ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சி வரும் 6ஆம் திதி காலை 9 மணிக்கு சென்னை, எழும்பூரில் உள்ள கட்சித் தலைமையகமான தாயகத்தில் நடைபெறவுள்ளது. இதில் ம. தி. மு. க. பொதுச்செயலாளர் வைகோ பங்கேற்று கட்சிக்கொடியை ஏற்றுவார். தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகள் நடைபெறும் - என்றுள்ளது.

# தி. மு. க. அரசு வீழும் நாள் வெகுதொலைவில் இல்லை

## பா. ம. க. தலைவர்

சென்னை, ஏப். 30

விவசாயிகளை பழிவாங்கும் தி.மு.க. அரசு வீழ்த்தப்படும் நாள், வெகு தொலைவில் இல்லை“ என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

கொலை, கொள்ளை, போதை குற்றவாளிகளை கைது செய்ய வேண்டிய தமிழக அரசு, அப்பாவி விவசாயிகளை கைது செய்கிறது.

ஒட்டு மொத்த உலகுக்கும் உணவளிக்கும் கடவுள்களான விவசாயிகளை மதிக்காத எந்த அரசும் நீடித்தது இல்லை. தமிழகத்தில் விவசாயிகளை மதிக்



காத - அவர்களை பழிவாங்கும் தி.மு.க., அரசு மக்களால் வீழ்த்தப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை - என்று கூறியுள்ளார். (ஐ)

# “மாணவியர் தவறாக வழிநடத்திய பேராசிரியை குற்றவாளி”

சென்னை, ஏப். 30

கல்லூரி மாணவிகளை தவறாக வழிநடத்த முயன்றார் என்று தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் பேராசிரியர் நிர்மலாதேவி குற்றவாளி என்று சிறீவில்லிபுத்தூர் விரைவு மகளிர் நீதிமன்ற நீதிபதி பகவதி அம்மாள் தீர்ப்பளித்துள்ளார்.

அருப்புக்கோட்டை தனியார் கல்லூரி பேராசிரியை நிர்மலாதேவி, மாணவிகளை கைபேசியில் தொடர்பு கொண்டு, அவர்களை தவறாக வழிநடத்தும் வகையில் பேசினார் என்று 2018ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கிலேயே நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

(ஐ)

# கொடநாடு கொலை வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

சென்னை, ஏப். 30

ஜெயலலிதாவுக்கு சொந்தமான கொடநாடு பங்களா கொலை, கொள்ளை வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் கொடநாட்டில் ஜெயலலிதாவுக்கு சொந்தமான பங்களாவில் கடந்த 2017ஆம் ஆண்டு கொலை, கொள்ளை சம்பவம் நடந்தது.

இந்த வழக்கில் 49 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 10 பேர் நீதிமன்றில் முன்னிலையாகததால் நேற்றைய திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்றைய வழக்கில் ஒருவரே மன்றில் முன்னிலையானார். இதைத் தொடர்ந்து எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# சிறீலங்கா சுதந்திர கட்சியை மீளக் கட்டியெழுப்பத் தயார்!

## சந்திரிகா பண்டாரநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 30

**இளம் தலைவர்களை ஒன்றிணைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்பவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்**



இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை மீள கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவே உள்ளேன்.

சுயலாபம் கருதி ஏதேனும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக ஆட்சிக்கு வருவதற்கே இன்று பலரும் முயற்சிக்கின்றனர்.

நாடு தொடர்பாகவும் நாட்டுமக்கள் தொடர்பாகவும் அக்கறையில்லாத சிலர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான சுயலாப அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.நாம் நாடு தொடர்பில் சிந்தித்தே எனது அரசியல் பயணம் அமைந்தது. இதனால் நான் பலவற்றை இழக்கவும் நேரிட்டது.

இந்த நாட்டின் பொருளாதாரக் கொள்ளையர்கள் என நீதிமன்றத்தினால் நிரூபிக்கப்பட்டவர்கள் இன்று இந்த நாட்டின் பிரதான அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர். இவ்வாறானவர்களுடன் ஒருபோதும் அரசியல் பயணத்தை தொடர முடியாது. கட்சி உறுப்புரிமையையும் நான் விரும்பவில்லை.

எனினும் சுதந்திரக்கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க பங்களிப்பு வழங்குவேன். வீழ்ச்சியடைந்துள்ள சுதந்திரக்கட்சியை மீள கட்டியெழுப்புவதற்கு சில காலம் தேவைப்படுகின்றது. நான் ஐக்கிய தேசியக் கட்சியை கட்டியெழுப்புவதற்காகவே மீளவும் அரசியலுக்குள் பிரவேசித்துள்ளதாக பலர் கூறுகின்றனர்.

அது தவறான கூற்று. சுதந்திரக்கட்சி மொட்டுத்தரப்பினருடன் இணைந்து திசைமாறிபயணிப்பதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில் நான் ஒதுங்கிச் செயல்பட்டேன்-என்றார். (அ)

# இளைய சகோதரன் தாக்கி மூத்த சகோதரன் மரணம்!

கொழும்பு, ஏப். 30

இரு சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் இளைய சகோதரன் கத்திரிக்கோலினால் தாக்கியதில் மூத்த சகோதரர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூத்த சகோதரன் உயிரிழந்துள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

குருவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் 17 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஓ.எல். கருத்தரங்குகளுக்கு இன்று நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, ஏப். 30

மே 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சாதாரணத் தர பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் என்பன இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை காலப்பகுதியில், பாடங்கள் தொடர்பான குறிப்புக்கள்,பாட விரிவுரை, வகுப்புகள் நடத்துதல் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றை நடாத்துவதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் பரீட்சை தொடர்பான வினாக்கள் வழங்கப்படும் என சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல், கையேடுகள் வழங்குதல் மற்றும் அச்சிடப்பட்ட கையேடுகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மே தின பேரணிக்கு பஸ்களை கோரியுள்ள அரசியல் கட்சிகள்

கொழும்பு, ஏப். 30

இம்முறை மே தின பேரணியை முன்னிட்டு பல அரசியல் கட்சிகளும் பஸ்களை கோரி விண்ணப்பித்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இந்த கோரிக்கைகளுக்கு அமைவாக கட்சிகளுக்கு தேவையான பஸ்களை வழங்குமாறு அனைத்து டிப்போக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை கூறியுள்ளது.

விசேட சுற்றுலாப் பயணங்களுக்கான பஸ் கட்டணத்தின் அடிப்படையில் இவை கட்சிகளுக்காக வழங்கப்படவுள்ளன.

இதனிடையே, இம்முறையும் பல அரசியல் கட்சிகளால் மே தினக் கூட்டங்களுக்காக பஸ்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# ஆர். எம். பார்க்ஸின் எரிபொருள் விநியோகம் மே 10 இல் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 30

அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் நிறுவனம் அடுத்த மாதம் முதல் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி ஆர்.எம். பார்க்ஸ் நிறுவனம் மே மாதம் 10 ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோக செயற்பாடுகளை நாட்டின் ஆரம்பிக்கவுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த நிறுவனத்துக்கு சொந்தமான டீசல் மற்றும் பெற்றோல் தாங்கிக் கப்பல்கள் ஏற்கனவே நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ள போதிலும் எரிபொருள் விநியோகத்திற்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே எரிபொருளை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

ஆர். எம். பார்க்ஸ் நிறுவனத்திற்கு, நாட்டில் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருளை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விலகிச் செல்லும் மன்னிப்புக் காலத்தை நீடிக்குமாறு இராணுவ படை கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

சட்ட ரீதியாக இராணுவத்திலிருந்து விலகிச்செல்வதற்கான பொதுமன்னிப்பு காலத்தை நீடிக்குமாறு ஒன்றிணைந்த இராணுவப் படை கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டவிரோதமாக இராணுவத்திலிருந்து விலகிச் சென்றவர்களுக்காக ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து மே மாதம் 20 ஆம் திகதி வரை பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியை பயன்படுத்தி உரிய முறையில் இராணுவத்திலிருந்து விலகுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொதுமன்னிப்பு காலப்பகுதியில் உரிய முறையில் சேவையை மீண்டும் தொடர்தல் அல்லது சட்டரீதியாக சேவையிலிருந்து விலகுதல் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பொது மன்னிப்புக் காலத்தின் முதல் வாரத்தில் வெளியேறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாடு முழுக்க பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஏப். 30

நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து மற்றும் காகிதாதிகள் உள்ளிட்டவற்றை வழங்காமைக்கான உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரியே அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் மே 6ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சகல சேவைகளில் இருந்தும் விலகிக் கொள்வுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் அனுராத செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 14,000 இற்கும் அதிகமான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆட்சியாளர்கள் 41 இலட்சம் குழந்தைகளின் எதிர்காலத்தை பற்றி சிந்திக்கவேயில்லை

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 30

இந்த வருட இறுதிக்குள் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு காலத்தில் பொய்யால் ஏமாற்றப்பட்ட நாடு முழுவதும் திவாலானது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 100 பில்லியன் டொலர்களுக்கு மேல் கடனில் உள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு தகவல் தொழில்நுட்பக் கல்வி, அறிவு சார்ந்த கல்வி உருவாக்கப்பட வேண்டும்.

மேலும் தகவல் தொழிநுட்பத்தில் குழந்தைகளை வலுவூட்டாதது, கல்வி உரிமையை முடக்குவது பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் தவறு அல்ல, ஆட்சியாளர்களையும் ஆட்சியாளர்களை நியமிக்கும் பெற்றோரின் தவறு.

அத்துடன் 41 லட்சம் குழந்தைகள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கவில்லை. உண்மைக் கதை இதுதான். நாட்டில் இலவசக் கல்வியில் ஆங்கில மொழி அறிவு குறைவாக உள்ளது, அதை அதிகரிக்க முயற்சி எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# டிரான் அலஸை ஜனாதிபதி உடனே பதவி நீக்கவேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

**கொழும்பு, ஏப். 30**

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமீபத்தில் விசேட அதிரடிப்படையினரின் முகமொன்றில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்த கருத்துக்களை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டித்துள்ளது.**

குற்றவாளிகளை நாட்டிலிருந்து வெளியேற்றுவது குற்றமில்லை. சரியான விடயத்திற்காக உங்கள் கரங்களில் உள்ள ஆயுதங்களை பயன்படுத்த தயங்கவேண்டாம். நாங்கள் உங்களுக்கு ஆதரவாகயிருப்போம் என அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்து குறித்து ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

இது இலங்கையின் அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அடிப்படை கொள்கைகளுக்கும் குற்றவியல் நீதி அமைப்புமுறையை வழிநடத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கும் முரணானது.

தவறிழைத்தவர்களுக்கு அபராதம் விதிப்பது உட்பட நீதியை வழங்குவது இலங்கை அரசமைப்பின் ஆணையின்படி முற்றுமுழுதாக நீதித்துறையின் நியாயாதிக்கத்திற்குள் வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளின் உரிய நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றவேண்டும். விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். சட்டத்திற்கு ஏற்ப நீதியான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்.

சட்டவிரோத படுகொலைகள், பொலிஸ் தடுப்பில் மரணங்கள், சட்ட அமுலாக்கல் பிரிவினரின் சித்திரவதைகள் போன்ற சம்பவங்கள் அச்சம் தரும் விதத்தில் அதிகரித்துள்ள நிலையில் நீதி வழங்குதல், தீர்ப்பளித்தல், தண்டனை என்பன நீதித்துறையின் கண்காணிப்புக்கு அப்பாற்றபட்டவை. அவற்றை கண்மூடித்தனமாக முன்னெடுக்கலாம் என்ற எண்ணத்தை அமைச்சர் டிரான் அலஸின் கூற்று உருவாக்குகின்றது.

அமைச்சர் தொடர்ச்சியாக பொறுப்புணர்வு அற்ற விதத்தில் கண்மூடித்தனமாக மற்றும் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை அவற்றை திருத்தவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பின் காவலன் என்ற அடிப்படையில் மக்களின் நலன்களுக்கு சேவையாற்றவேண்டிய தேவை அமைச்சருக்குள்ளது -எனினும் தொடர்ச்சியாக தவறாக வழிநடத்தும் அறிக்கைகளை அவர் வெளியிடுவது பொதுமக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் சட்ட அமுலாக்கல் தரப்பினரை தவறாக வழிநடத்துகின்றது.

இதன் காரணமாக அமைச்சர் தனது கூற்றை உடனடியாக வாபஸ்பெறவேண்டும். அமைச்சர் தனது தொடர்ச்சியான அறிக்கைகள் மூலம் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தல், சட்டத்தின் ஆட்சியை அலட்சியம் செய்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதால் அவரை உடனடியாக ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யவேண்டும்-என்று கோரியுள்ளது. (அ)



# யாழில் பாலை, முதிரை குற்றிகள் பதுக்கி வைத்திருந்த இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 30

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் பாலை மற்றும் முதிரைகுற்றிகளை சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்த குற்றச்சாட்டில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெட்டப்பட்டு முத்திரை மற்றும் பாலை மர தீராந்திகள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு கொண்டுவரபட்டதாக வனவள பாதுகாப்பு திணைக்களத்துக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய குறித்த திணைக்களத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது 30 முதிரை மரகுற்றிகள் மற்றும் 33 பாலை மர தீராந்திகளுடனும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யபட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழ். சிறையில் தாக்குதலுக்கு உள்ளான இரண்டு கைதிகள் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணச் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களின் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவித்து இரண்டு விளக்கமறியல் கைதிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரை அவரது தாயார் பார்வையிடச் சென்ற சமயம் அவருக்கு பீடி வழங்கியுள்ளார்.

அதனைச் சிறைக்கூடத்திற்குள் வைத்திருந்தவேளை, சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கண்டறிந்து, அவற்றைப் பறிக்க முயன்றவேளை முரண்பாடு ஏற்பட்டு, விளக்கமறியல் கைதியை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பீடி வைத்திருந்த தகவலை தமக்கு வழங்கவில்லை என அந்த சிறைக்கூடத்தில் இருந்த மற்றையவரையும் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில், தாக்குதலுக்கு இலக்கான இருவரும் வழக்கு தவணைக்காக யாழ்.நீதவான் நீதிமன்றுக்கு அழைத்துச் சென்றவேளை, தம் மீதான தாக்குதல் தொடர்பில் மன்றில் தெரிவித்தனர்.

அதனை அடுத்து இருவரையும் சிகிச்சைக்காக யாழ். போதான வைத்தியசாலையில் அனுமதித்து, சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தி மருத்துவச் சான்றிதழ் பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் கட்டளையிட்டுள்ளார். (அ)

# ஊழல் மோசடிகளுக்கு எதிராக செயல்படும் அரசே வேண்டும்!

## சன்ன ஜயசுமண கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

ஊழல் மோசடிகளுக்கு எதிராக செயற்படும் அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்ப்பார்ப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்வி எழுகின்றது. தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்படவில்லை. தேர்தலில் எந்தத் தரப்பினருடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கவில்லை.

நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் சேவை செய்யும் ஒருவருக்கு ஆதரவு வழங்க வேண்டும். பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண்பது மற்றும் வாழ்க்கை செலவு அதிகரிப்பை நிவர்த்தி செய்யும் அரசாங்கம் ஒன்றே மக்களின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலையாவதற்கு தயாராகவுள்ள எந்தவொரு கட்சிகளிடமும் சிறந்த பொருளாதாரத் திட்டம் கிடையாது.

நாட்டை தாரை வார்க்காத மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒருவருக்கே நாம் தேர்தலில் ஆதரவு வழங்குவோம்.

தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரை அதிகளவான மக்களை ஒன்றிணைத்து பிரசாரக் கூட்டங்களை நடத்தியிருந்த ஒரு கட்சியாகும்.

ஆனால் தேர்தலில் அவர்களுக்கு நூற்றுக்கு 3 வீத வாக்குகளே கிடைத்தன. ஊழல்மோசடிகளுக்கு எதிராக செயற்படும் அரசாங்கம் ஒன்றையே மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர்-என்றார்.

# கல்வியங்காடு சந்தையில் நேற்று மரக்கறி வியாபாரிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 30

வீதியோரத்தில் காணப்படுகின்ற மரக்கறி வியாபார நிலையத்தை அகற்றுமாறு கோரி கல்வியங்காட்டு மரக்கறி சந்தை வியாபாரிகள் நேற்று காலை முதல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கல்வியங்காடு செங்குந்தா பொதுச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் மரக்கறி வியாபாரிகளேநேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து சந்தை வியாபாரிகள் கருத்து தெரிவிக்கையில்-

எமது சந்தை யாழ். மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்டு இயங்கி வவருகின்றது. நாம் சந்தை குத்தகைப் பணத்தையும் மாநகர சபைக்குச் செலுத்தி வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த மூன்று வருடங்களாக கொரோனா தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து எமது சந்தைக்கு எதிரே உள்ள வீதியோரத்தில் தனியார் ஒருவர் மரக்கறி விற்பனையை நடத்தி வருகின்றார்.

இது குறித்து நாம் யாழ். மாநகர சபைக்கு அறிவித்திருந்தோம். இந்நிலையில் மாநகர சபை குறித்த பகுதி நல்லூர் பிரதேச சபைக்கு உரிய இடம் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து நல்லூர் பிரதேச சபைக்கும் முறையிட்டோம்.

பின்னர் இதற்கு பொலிஸாரிடம் முறையிடுமாறும் கோரப்பட்டது.

பொலிஸாரிடமும் முறையிட் டோம். மாநகர சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டப் பணம் விதிக்கப்பட்ட போதிலும் அவர்கள் மேன்மு றையீடு செய்து தற்போதும் கடை நடத்தி வருகின்றார்கள்.



இந்நிலையில் நாம் வடமாகாண ஆளுநர் உட்பட சம்பந்தபட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் குறித்த விடயம் தொடர்பில் அறிவித்தபோதிலும் இதுவரை எதுவும் நடவடிக் கைகளும் எடுக்கப்படவில்லை - என்றனர்.

இதேவேளை, சந்தை விலையிலும் பார்க்க வீதியோரத்தில் விற்பனையகத் தில் மரக்கறி வகைகள் குறைந்த விலை யில் விற்பனையாகின்றன அந்தப் பகுதி பொது மக்கள் கூறிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 223 குடும்பங்களுக்கு அரச வீடுகள்

## பிரசன்ன ரணதுங்க தகவல்

கொழும்பு, ஏப். 30

**ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 223 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



Prasanna

மேலும் 11 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

223 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 139 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. காணியுடன் கூடிய புதிய வீடு கட்டுதல், புதிய வீடுகள் கட்டுதல், வீடுகளை புனரமைப்பு செய்தல் போன்ற பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கம்பஹா கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தை அண்மித்த பகுதிகளில் அதிகளவான குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. கட்டுவாபிட்டிய தேவாலயத்துடன் தொடர்புடைய 144 குடும்பங்களுக்கு இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அந்த தேவாலயங்கள் தொடர்பான வீடமைப்பு திட்டத்திற்காக மாத்திரம் 90.855 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை தேவாலயம் தொடர்பில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 09 குடும்பங்களுக்கு வீடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். வீடமைப்புத் திட்டத்தை விரைவாக முடிக்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, ஈஸ்டர் தினத்தன்று தாக்குதலுக்கு உள்ளான கட்டுவாப்பிட்டி தேவாலயத்திற்கு அரசாங்கம் புதிய ஞாயிறு அறநெறிப் பாடசாலை கட்டிடத்தையும் நிர்மாணித்துள்ளது. இது புத்த சாசன, மத மற்றும் கலாச்சார அமைச்சினால் இதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 13 கோடிக்கு மேல். 14 வகுப்பறைகளைக் கொண்ட இந்த ஞாயிறு அறநெறிப் பாடசாலைக் கட்டிடம் 02 மாடிகளைக் கொண்டது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு இதன் நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றதுடன், கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி இக்கட்டடத்தை தேவாலயத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தது-என்றார்.

# நச்சுத்தன்மையான பொருட்களுடன் 18 பெண்கள் உட்பட 760 பேர் கைது!

கொழும்பு, ஏப். 30

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத் தன்மைமிக்க போதைப்பொருட்களுடன் 18 பெண்கள் உட்பட 760 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 17 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள சந்தேக நபரொருவரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 131 கிராம் ஹெரோயின், 201 கிராம் ஐஸ் , 399 கிராம் கஞ்சா , 16 கிராம் ஹெரோயின் மற்றும் 134 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# இலங்கையின் சனத்தொகையில் 10 வீதமானோருக்கு சிறுநீரக நோய்!

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் சனத்தொகையில் 10 சத வீதமானோர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறுநீரக நோயாளர் சங்கத்தின் பிரதம வைத்தியர் சஞ்சய ஹெய்யன்துடுவ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு நீரிழிவு நோயே பிரதான காரணியாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

நமது நாட்டில் சுமார் 10 சத வீதமானோர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். உண்மையில் பல்வேறு காரணிகள் இந்தப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்த நோய் தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக நம் நாட்டில் சிறுநீரகத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியாக சர்க்கரை நோய் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சமத்துவ கட்சியின் மே தினம் கிளிநொச்சி பசுமை பூங்காவில்

கிளிநொச்சி, ஏப். 30

சமத்துவக் கட்சியின் மே தின நிகழ்வுகள் வருகின்ற மே முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தி பசுமை பூங்காவில் இடம் பெறவுள்ளது.

ஒடுக்கும் அதிகாரத்தை உடைதெறிவோம், உரிமையை மீட்டெடுப்போம் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தம் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் மே தின நிகழ் வுகள் இடம்பெறவுள்ளது என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சமத்துவக் கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இடர் நிறைந்த வரலாற்றுத் தருணத்திலேயே இந்த மேநாளும் வந்திருக்கிறது இன ஒடுக்குமுறையும் பொருளாதாரப் பிரச்னையும் இணைந்து இரட்டைத் தாக்குதலை நம்மீது மோசமாக நடத்துகிறது. இரண்டையும் முறியடித்து விடுதலை அடையவேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இனப்பிரச்னைக்கும் பொருளாதாரப் பிரச் னைக்கும் தீர்வைக் காண வேண்டிய அரசும் ஆட்சியாளர்களும் அதை வைத்தே பிழைத்துக் கொண்டிருக்கும் போக்கே தொடர்கிறது. அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்வோரும் மறைமுகமாக இனவாதத்துக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் ஒத்துழைக்கிறார்கள். ஆகவே இரண்டு தரப்பும் மக்களுக்கு விரோதமாகவே செயற்படுகின்றன. இவற்றை நாம் முறியடிக்க வேண்டும். அதற்காக விழிப்படையவேண்டும். ஒன்றிணைந்து பலமடைய வேண்டும்.

இன்று நாட்டின் வளங்களையெல்லாம் அந்நிய சக்திகள் கொள்ளையடிக்க முற்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசங்களிலும் வளக் கொள்ளைக்கு அரசாங்கமே துணை நிற்கிறது. அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் சக்திகள் மக்களுக்கு

விரோதமான முறையில் வளக்கொள்ளைக்குத் துணை போகின்றன. அனைத்து நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்கின்ற மக்களே இதற்கும் எதிராகப் போராட வேண்டியுள்ளது.

உழைப்பாளர்களுடைய உரிமைக் குரலுக்கான இந்த நாளில் உழைப்பவர்களோடு இணைந்து அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக எங்களை எழுச்சி கொள்ள வைப்போம். அனைத்து ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடி, உரிமை பெற்று சமத்துவமாக வாழ்வதே நமது இலட்சியமாகும்.

மே நாள் என்பது இவை அனைத்தையும் எதிர்த்து உடைப்பதற்கான ஒருங்கிணைந்த நமது எழுச்சியையும் பலத்தையும் எதிர்ப்புணர்வையும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதாகும். இந்த ஒருங்கிணைந்த எழுச்சியோடு நாம் நமது பலத்தைப்

பெருக்க வேண்டும்-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700 வழங்க மறுத்தால் உரிய நடவடிக்கை!

## அமைச்சர் மனுச நாணயக்கார தகவல்



கொழும்பு, ஏப். 30

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய முடிவை எடுப்பார் - என்று தொழில் அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் நலனைக்கருதியே ஜனாதிபதியின் முடிவு அமையும் எனவும் அவர் கூறினார்.

“2020 ஆம் ஆண்டிலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்டது. தற்போது 4 வருடங்கள் கடந்துவிட்டன. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு அவசியம். கூட்டு ஒப்பந்த முறைமைக்கு மீண்டும் வருமாறு அழைப்பு விடுத்தேன்.

அதற்கு நிறுவனங்கள் உடன்படவில்லை.அதன் பின்னரே சம்பள நிர்ணயசபை கூட்டப்பட்டது. அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா கோரப்பட்டுள்ளது. இதனை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இன்னும் இணக்கம் தெரியவில்லை.” - எனவும் அமைச்சர் கூறினார்.

(அ)

# ஈ.பி.டி.பியின் யோகேஸ்வரி எமது பூர்வீக வீட்டை அபகரித்துவிட்டார்!

## உறவுக்கார பெண் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம், நல்லூரிலுள்ள தமது பூர்வீக வீட்டை, ஈ.பி.டி.பியின் யாழ்.மாநகர சபை முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா முறையற்ற விதமாக ஆக்கிரமித்துள்ளதாக அவரது உறவினரான பெண்ணொருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனை கூறினார்.

யோகேஸ்வரியின் கணவர் பற்குணராஜாவின் சகோதரரின் மனைவியின் சகோதரியே இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தன்னுடையதும், தனது சகோதரியுடையதுமான அந்த வீடு, காணியை 1989ஆம் ஆண்டில் யோகேஸ்வரி குடும்பம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சிலகாலம் குடியிருக்க அனுமதித்தோம். யோகேஸ்வரின் கணவர் காலமாகியதை தொடர்ந்து கணவரின் சகோதரர் குடும்பத்துடனான தொடர்புகளை துண்டித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேற அவர் மறுத்து வருகிறார்.

இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கு இரு தரப்பும் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, 1992ஆம் ஆண்டளவில் வீட்டை பணம் கொடுத்து பெற்றுவிட்டதாக யோகேஸ்வரி கூறியுள்ளார்.

அவர் கூறியது உண்மையெனில், வீட்டு உறுதியை வெளிப்படுத்தவேண்டும். வீட்டு உறுதி எம்மிடமே இருக்கிறது.

இது குறித்து பொலிஸார் மேலதிக நடவடிக்கையெடுக்க முடியாமல், நீதிமன்றத்தை நாடும்படி கூறினர். நாம் நீதிமன்றத்தை நாடவுள்ளோம்.

நாம் பலமுறை அந்த வீட்டுக்குச் சென்றபோதும், வீடு பூட்டியிருந்தது. அந்த வீட்டின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோம் -என்றார்.

யோகேஸ்வரி பற்குணராஜா ஈ.பி.டி.பி அமைப்பின் உயர் மட்ட உறுப்பினர் ஆவார். கடந்த முறை யாழ் மாநகரசபை உறுப்பினராக பதவி வகித்த அவர், அதற்கு முன்னர் யாழ். மாநகரசபை முதல்வர் பதவியை வகித்திருந்தார்.

(அ)

# மட்டக்களப்பு வாகனேரியில் உருக்குலைந்த சடலம் மீட்பு!



மட்டக்களப்பு, ஏப். 30

**மட்டக்களப்பு வாகனேரி காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

இந்தச் சடலம் நேற்று திங்கட்கிழமை காலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு பிரதான வீதி வாகனேரி காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மரம் ஒன்றில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்றே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலைக்கு முஷாரப் எம்.பி. 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

அம்பாறை, ஏப்.30

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் , கூட்டமண்டப நிர்மாண வேலைத் திட்டத்திற்காக தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து முதற்கட்டமாக 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு விடுத்த வேண்டுகோளை ஏற்று அண்மையில் பாடசாலைக்கு கள விஜயமொன்றை மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவர் இந் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் மற்றும் அவரது இணைப்புச் செயலாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான ஏ.எம். அஷாம் மௌலவி ஆகியோருக்கு இப் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் சார்பாக அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

(அ)

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அம்பாறை கிளை அங்குரார்ப்பணம்

அம்பாறை, ஏப். 30

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அம்பாறை மாவட்டக் குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

நிகழ்வில், கூட்டணியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம், துணைத் தேசிய அமைப்பாளர் இரா.துரைரெட்ணம், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் க. சிவநேசன் மற்றும் கைலாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும், கட்சிகளிலிருந்து தலா மூன்று பிரதிநிதிகள் அடங்கலாக மாவட்டக்குழு உருவாக்கப்பட்டதுடன், மாவட்டக் குழுவின் இணைப்பாளராக ஹென்றி மஹேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# மட்டக்களப்பு விவசாய திணைக்களத்தின் ஒருங்கிணைந்த விழிப்புணர்வூட்டல் நிகழ்வு

மட்டக்களப்பு, ஏப். 30

மட்டக்களப்பு பாலையடி வட்டை விவசாய திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர் பிரிவில் உள்ள வம்மியடியூற்று கிராமத்தில் ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் நிகழ்வு நடைபெற்றது.

பாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் ரீ.கோபி தலைமையில் நடைபெற்ற விழிப்பூட்டல் நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் கலந்து கொண்டார்.

விவசாயிகளின் பிரச்னைகள் கேட்டறியப்பட்டு, தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

மாமரங்கள் மற்றும் பழமரங்களை கத்தரித்தல், பசளைப் பிரயோகம், விவசாய இரசாயனங்களின் முறையான பயன்பாடுகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

(அ)

# காரைதீவில் அரிசி விநியோகம்



காரைதீவு, ஏப். 30

குறைந்த வருமானம் பெறும் குடும்பபங்களுக்கு ஆதரவு வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்த வகையில் காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோக நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.முஷாரப் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் உதவி பிரதேச செயலாளர் செ.பார்த்தீபன் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் இராஜகுலேந்திரன் மற்றும் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம் .எம் அச்சு முகமட் கலந்து கொண்டனர்.

(அ)

# மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு



அம்பாறை, ஏப். 30

அம்பாறை மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அம்பாறை ஹாடி சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர் சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அம்பாறை வலகம்புற மகா வித்தியாயத்தில் இம்முறை நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அடிப்படை வசதிகள் அற்ற-மேலதிக வகுப்புகளுக்கு சென்று கல்வி கற்க முடியாத வசதிகளற்ற மாணவர்களுக்கு பிரசித்தி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு துரித மீட்டல் வகுப்புகளை ஒழுங்கு செய்துள்ளது. (அ)

# பாசிக்குடா கடலில் நீராடியவர் மாயம்!

## தேடும் பணிகள் தீவிரம்

திருமலை, ஏப். 30

கல்குடா - பாசிக்குடா கடலில் நீராடிக் கொண்டிருந்த நபர்களில் ஒருவர் மாயமாகியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த குழுவினர் ஒன்று சேர்ந்து நீராடிக் கொண்டிருந்தபோதே அதில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இவ்வாறு காணாமல்போன நபரை கல்குடா டைவர்ஸ் அணியினர் நேற்று முன் தினம் 3 மணி நேரம் தேடியும் அந்த நபர் கிடைக்கவில்லை.

காணாமல்போன நபரை தேடும் பணிகள் நேற்றும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பில் கல்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# பாடசாலை வரவு குழு தொடர்பான செயலமர்வு

காரைதீவு, ஏப். 30

கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் அறிவுறுத்தலில் சம்மாந்துறை வலயக்கல்வி முறைசாராக் கல்விப்பிரிவு கோட்டம் தோறும் வரவுக்குழு செயலமர்வுகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் நேற்று திங்கட்கிழமை நாவிதன்வெளி கோட்டத்திற்கான செயலமர்வு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வளவாளர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் எம்ஐ. அகமட் லெவ்வை ஆகியோர் விளக்கமளித்தனர்.



22 பாடசாலைகளின் வரவுக் குழு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதேவேளை கடந்த வாரம் சம்மாந்துறை கோட்டத்திற்கான செயலமர்வு சம்மாந்துறை கோட்டக் கல்வி காரியாலயத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக சர்வதேச நீதிமன்று பிடியாணை?

## அச்சத்தில் அதிகாரிகள்

**நியூயோர்க், ஏப். 30**

**இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்கத் தயாராகி வருவதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

ஹமாஸுடனான மோதல் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிரதமர் உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு எதிராகப் பிடியாணையைப் பிறப்பிக்கலாம் என இஸ்ரேல் மற்றும் வெளிநாட்டு அதிகாரிகள் ஐவர் தெரிவித்தனர்.

ஹமாஸின் தலைவர்களுக்கு எதிராகவும் பிடியாணைகளைப் பிறப்பிப்பது குறித்தும் சர்வதேச நீதிமன்றம் ஆராய்வதாக அதிகாரிகள் கூறினர்.

நீதிமன்றம் தனது நடவடிக்கையை தொடர தீர்மானித்ததால் காஸா பள்ளத்தாக்குக்கு மனிதாபிமான உதவிகள் செல்வதைத் தடுத்தமை, ஹமாஸின் ஒக்டோபர் ஏழாம் திகதி தாக்குதலுக்கு மிகக்கடுமையான பதில் தாக்குதலை முன்னெடுத்தமை போன்ற குற்றச்சாட்டுக்களை நீதிமன்றம் இஸ்ரேல் அதிகாரிகளுக்கு எதிராக சுமத்தலாம் என குறித்த அதிகாரிகள் அச்சம் வெளியிட்டனர்.


இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து கவலை கொண்டுள்ள இஸ்ரேல் அதிகாரிகள், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராகவும் பிடியாணை பிறப்பிக்கப்படலாம் எனத் தெரிவித்தனர்.

எனினும் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த யாருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படலாம் என்ன குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படலாம் என்ற விபரங்கள் வெளியாகவில்லை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணைகளை உலகம் இஸ்ரேலுக்கான ஒரு தார்மீக கண்டனமாக பார்க்கக்கூடும்.

காஸாவில் அதன் நடவடிக்கைகளுக்காக கடந்த சில மாதங்களாக இஸ்ரேல் சர்வதேச அளவில் கடும் கண்டனத்தை எதிர்கொண்டுள்ளது. (எ)

# சூறாவளி தாக்கி 4 பேர் பலி! அவசர நிலை பிரகடனம்



வாஷிங்டன், ஏப். 30

அமெரிக்காவின் ஒக்லஹோமாவில் ஞாயிற்றுக்கிழமை வீசிய சூறாவளியால் கைக்குழந்தை உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

மேலும், கடுமையான வானிலையால் ஒரு கிராமப்புற நகரத்தின் மையப்பகுதியில் கட்டடங்கள் தரைமட்டமாகின.

ஒக்லாஹோமா மாநிலம் முழுவதும் 100 பேர் படுகாயமடைந்தனர்.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மின்னிணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

சுமார் 5,000 மக்கள் வசிக்கும் சல்ஃபூரில் நகரே உருக்குலைந்தது. அங்கு ஏராளமான வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன. கார்கள் மற்றும் பேருந்துகள் தூக்கி வீசப்பட்டன.

இந்நிலையில் ஒக்லஹோமாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.(எ)



# அடுக்குமாடியிலிருந்து விழுந்த கைக்குழந்தையை மீட்ட மக்கள்!

சென்னை, ஏப். 30

தமிழ்நாட்டில் சென்னை ஆவடி அருகே அடுக்குமாடி குடியிருப்பின் 4 ஆவது மாடியிலிருந்து கீழே விழுந்த 6 மாத பெண் குழந்தை, 2 ஆவது மாடியில் மழைக்காக அமைக்கப்பட்டிருந்த தகர கூரையில் விழுந்ததால் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தது. குடியிருப்புவாசிகள் உயிரைப் பணயம் வைத்து, அந்தக் குழந்தையைப் பத்திரமாக மீட்டனர்.

கூரையின் நுனியில் குழந்தை தவிப்பது முதல், பத்திரமாக மீட்கப்பட்டது வரை வீடியோவாக பதிவு செய்த ஒருவர் இதை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார். வலைத்தளங்களில் இது வைரலானது. குழந்தையை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

(எ)

# தென் சீனாவை தாக்கிய சூறாவளி ஐவர் உயிரிழப்பு; 33 பேர் படுகாயம்

குவாங்சோ, ஏப். 30

தென் சீனாவிலுள்ள மிகப் பெரிய துறைமுக நகரமான குவாங்சோவில் பெரும் சூறாவளி தாக்கியுள்ளது.

இதனால் குவாங்டாங் மாகாணத் தலைநகரில் கடுமையாக மழை பெய்துவரும் நிலையில் ஆலங்கட்டி மழையால் ஐவர் உயிரிழந்தனர். 33 பேர் படுகாயமடைந்தனர்.

141 தொழிற்சாலை கட்டடங்கள் சேதமடைந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூறாவளி மணிக்கு 2. 8 கிலோமீற்றர் வேகத்தில் வீசியதோடு அதிகபட்சமாக வினாடிக்கு 20.6 மீற்றர் வேகத்தில் வீசியதாக குவாங்சோவின் பையுன் மாவட்டத்திலுள்ள வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

குவாங்டாங் மாகாணத்தில் வரலாறு காணாத வெள்ளத்தில் சிக்கி பல நகரங்களில் நால்வர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். 10 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்கூட்டியே பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை, ஆலங்கட்டி மழை மற்றும் சூறாவளி குறித்து எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன.

செங்செங் மற்றும் பன்யுவின் குவாங்சோ மாவட்டங்களின் பெரியளவிலான ஆலங்கட்டி மழை பெய்து வானகங்களைச் சேதப்படுத்தியுள்ளது.

பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான குவாங்சோவின் விமான நிலையத்தில் பல விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

கனமழை, ஆலங்கட்டி மழை மற்றும் சூறாவளியுடன் அடுத்த ஐந்து நாட்களுக்கு மாகாணத்தில் அதிக மழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

(எ)

# கொலை செய்யவும் உயிரிழக்கவும் தயாரான சிட்னி சிறார்கள்!

## ஆஸி. பொலிஸார் அதிர்ச்சி தகவல்

சிட்னி, ஏப். 30

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட பதின்ம வயதினர் சிட்னி தேவாலயத் தாக்குதலின் பின்னர் பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொண்டு பலரை கொலை செய்துவிட்டு உயிரிழக்கத் தயாராகயிருந்தனர் என- அந்நாட்டு பொலிஸார் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது ஏழு பதின்ம வயதினர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் ஆறு பேர் சிட்னி தேவாலயத்தில் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட இளைஞனின் சகாக்கள் என பொலிஸார் கூறினர்.

இவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதலுக்குத் திட்டமிட்டமை உட்பட பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

கைது செய்யப்பட்ட பதின்ம வயதினரில் நால்வர் தேவாலய கத்திக்குத்து இடம்பெற்ற சில நாட்களின் பின்னர் மறைகுறியாக்கப்பட்ட செய்தியிடல் செய்தியான சிக்னல் மூலம் உரையாடியுள்ளனர்.

நான் உயிரிழக்க விரும்புகின்றேன். நான் கொலை செய்ய விரும்புகின்றேன். நான் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளேன் என அவர்கள் தங்களுக்குள் தெரிவித்துள்ளனர்.

எப்படியும் நாங்கள் கொல்லப்போகின்றோம். பொறுமையாக இருக்க வேண்டும் என 16 வயது இளைஞன்தெரிவித்துள்ளான்

அவன் திட்டம் உயிருடன் பிடிபடுவதா? இறப்பதா? என மற்றுமொரு இளைஞன் கேள்வி எழுப்பியுள்ளான்.

நாங்கள் திட்டமிடப்போகின்றோம், தப்பிப்பதுதான் எங்கள் திட்டம். ஆனால் என்ன நடந்தாலும் அது அல்லாவின் வலிமை என அவன் தெரிவித்துள்ளான்.

இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்யத்திட்டமிட்டனர் என பொலிஸார் கூறினர்.

இந்த இளைஞர்கள் தாங்கள் யாரை இலக்குவைக்க வேண்டும் என்பது குறித்தும் சிக்னலில் உரையாடியுள்ளனர்.

நான் யூதர்களை இலக்குவைக்க விரும்புகின்றேன் என 15 வயது இளைஞன் தெரிவித்துள்ளான்.- என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக ஆஸி பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கவிஞரின் மகளும் மரணம்

காஸா, ஏப். 30

இஸ்ரேலிய படையினர் காஸாவின் மேற்கு பகுதியிலுள்ள வீடொன்றின் மீது மேற்கொண்ட விமானத் தாக்குதலில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த பிரபல கவிஞரின் மகள் சைமா ரெவாட் அலரீர் உயிரிழந்தார்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் தந்தை இதேபோன்ற தாக்குதலில் கொல்லப்பட்ட நிலையில் மகளும் உயிரிழந்தார்.

இஸ்ரேல் குறித்த வீட்டை இலக்குவைத்து பல தடவைகள் மேற்கொண்ட தாக்குதலில் அலரீரும் கணவரும் அவர்களின் இரண்டு வயது மகனும் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது.

அந்த வீட்டை மூன்று ஏவுகணைகள் தாக்கின என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் சுஜாயாவிலுள்ள வீட்டின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் தனது குடும்பத்தை சேர்ந்த பலருடன் கொல்லப்பட்ட கவிஞர் ரெபாட் அலரீரின் மகள் சைமா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து கவிஞரின் மகள் இடம்பெயர்ந்து தங்கியிருந்த வீட்டின் மீதே தற்போது தாக்குதல் நடத்தப்பட்டது. (எ)

# ஈரான் ஜனாதிபதியின் வருகையால் இஸ்ரேலுடனான உறவில் பாதிப்பில்லை

## கூறுகிறார் பாலித ரங்கே பண்டார



**கொழும்பு, ஏப். 30**

**ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தால் இஸ்ரேலுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவில் எவ்வித விரிசலும் ஏற்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஈரான் போர் நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், அந்நாட்டின் ஜனாதிபதி இலங்கை போன்ற சிறியதொரு நாட்டுக்கு வருவாரா என சிலர் கேள்வி எழுப்பினர். ஆனால் அணிசேராக் கொள்கையை பின்பற்றும் இலங்கை மற்றும் தற்போதைய ஜனாதிபதிக்கு மதிப்பளித்து அவர் இங்கு வந்தார். இது எமது நாட்டுக்கு கிடைத்த கௌரவமாகும்.

ஈரான் ஜனாதிபதி இலங்கை வருவதால் இஸ்ரேல் எம்மை பகைத்துக்கொள்ளும் என சிலர் கருதினர்.

ஆனால் இஸ்ரேல் ஜனாதிபதி நாடு திரும்புவதற்கு தயாரான வேலை, இஸ்ரேல் விமானமொன்றும் வந்தது. இஸ்ரேல் நாட்டுக்கு செல்லும் ஊழியர்களை ஏற்றிச்செல்லவே அந்த விமானம் வந்தது. இதன்மூலம் இஸ்ரேலுடன் பிரச்னை இல்லை என்பதும் புலனானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர் என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது. அதேபோல பலஸ்தீன மக்களுக்கும் நேசக்கரம் நீட்டி வருகின்றோம். இஸ்ரேல், பலஸ்தீனம் மற்றும் ஈரானுடன் இலங்கைக்கு சுமூக உறவு இருக்கின்றது-என்றார்.

(அ)

# இலங்கைக்கு கடத்தத் தயாராக இருந்த ரூ. 2,000 கோடி போதைப்பொருள் மீட்பு!

புதுடில்லி, ஏப். 30

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த 600 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான போதைப்பொருளை இந்திய கடலோர பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது இலங்கைப் பெறுமதியில் 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் இந்திய கடலோர பொலிஸார், அரேபிக் கடல் பகுதியில் பாகிஸ்தானைச் சேர்ந்த படகு ஒன்றை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போதே 600 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அல் ராசா என்ற கப்பல் மூலம் கடத்தப்பட்விருந்த இந்த போதைப்பொருளுடன், 14 பாகிஸ்தானியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய கடலோரப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மேலதிக விசாரணைக்காக குஜராத்திலுள்ள போர்பந்தருக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்த போதைப்பொருளானது இந்தியாவுக்கு கடத்த முயற்சித்ததாக ஆரம்பத்தில் சந்தேகித்தபோதிலும், பின்னர் அவை இலங்கைக்கு கடத்த முயற்சிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அஹமதாபாத் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த கடத்தல் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# இந்த வருடத்தில் இதுவரை 21,055 டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, ஏப். 30

இந்த வருடத்தில் இதுவரை 21,055 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி அதிக டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அவர்களில் 4,532 பேர் டெங்கு நோயாளர்களாக உள்ளனர்.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் 1,936 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையுடன் டெங்கு நோயாளர்கள் அதிகரிக்கக்கூடும் என அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை?

கொழும்பு, ஏப். 30

சுதந்திரக்கட்சியின் பதில் தலைவர் பதவியை ஏற்ற பொது ஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தமது கட்சி ஊடாக பாராளுமன்றம் தெரிவாகிவிட்டு, கட்சி உறுப்புரிமையில் இருந்து கூட விலகாமல், மற்றுமொரு கட்சியில் பதவியை ஏற்றமை குறித்தே அவருக்கு எதிராக இந்நடவடிக்கை எடுக்கப்படும் என மொட்டு கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விவகாரம் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும், விஜேயதாச ராஜபக்ச அழைக்கப்பட்டு இது தொடர்பில் விளக்கம் கோரப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக விஜயதாச ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

(அ)

# இலங்கையில் குறைவடைகிறது தொழிலாளர்கள் எண்ணிக்கை!

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் கடந்த வருடத்தில் தொழிலாளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், 2022ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக 8.54 மில்லியனாக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை கடந்த ஆண்டு 8.40 மில்லியனாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வேலையற்ற மக்கள் தொகை மற்றும் தொழிலாளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவு காரணமாக, வேலையின்மை விகிதம் முந்தைய ஆண்டை விட 2023ஆம் ஆண்டில் 4.7 சதவீதமாக மாறாமல் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# போலிக்கடவுச் சீட்டைப் பாவித்து தப்பிச் செல்ல முன்ற நபர் கைது!

கொழும்பு, ஏப். 30

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்த பிரதான பாதாள உலகக்குழு உறுப்பினர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டர்.

சந்தேகநபர், அங்கொடை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. அண்மையில் விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி அடையாள இயந்திரத்தின் மூலம் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

(அ)

# நாட்டில் வீழ்ச்சியடையும் வருடாந்த பிறப்பு வீதம்!

கொழும்பு, ஏப். 30

நாட்டில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், இறப்பு வீதம் அதிகரித்து வருவதாக பதிவாளர் நாயகத் திணைக்களத்தின், சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் சட்டத்தரணி லக்சிக்கா கணேபொல தெரிவித்தார்.

இது குறித்து பிரதி பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த 2000ஆம் ஆண்டில், நாட்டில் சராசரி இறப்பு எண்ணிக்கை 140,000ஆகக் காணப்பட்டது. அந்த எண்ணிக்கை தற்போது 180,000 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நாட்டில் பிறப்பு எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு, நாட்டில் பிறப்பு எண்ணிக்கை சுமார் 325,000ஆக காணப்பட்டது.

மேலும் பொருளாதார நெருக்கடி காரணமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாமல், பல்வேறு நோய் நிலைமைகளுக்கு ஆளாகுதல், மற்றும் மனநல பிரச்னைகள் உள்ளிட்ட காரணங்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக பிரதி பதிவாளர் நாயகம் தெரிவித்தார்.

(அ)

# ஒரு நாள் புகைத்தலுக்காக 52 கோடி செலவிடும் மக்கள்!

கொழும்பு, ஏப். 30

நாட்டில் நாளொன்றுக்கு 52 கோடி ரூபாயை மக்கள் புகைப் பிடிப்பதற்குச் செலவிடுவதாக மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 83 வீதமான மரணங்கள் தொற்றாத நோய்களினால் ஏற்படுவதாகவும், அவற்றில் புகைப்பிடித்தல் முக்கிய காரணங்களில் ஒன்றெனவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக நாளொன்றுக்கு சுமார் 50 பேர் புகைப்பிடிப்பதனால் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வருடமொன்றுக்கு 2300 சிகரெட் வடிகட்டிகள் சுற்றுச்சூழலுக்கு வெளிவிடப்படுவதாகவும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

குடும்ப தகராறு காரணமாக

# ஒன்பது மாதக் குழந்தையை கிணற்றில் வீசி கொன்ற தாய்!

கொழும்பு, ஏப். 30

தாயினால் ஒன்பது மாத குழந்தை ஒன்று கிணற்றில் வீசப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து குழந்தையை கிணற்றில் வீசி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் குழந்தையின் தாய் மஹபாகே பொலிஸார் கைது செய்தனர்.

ராகம பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக குழந்தை தாயினால் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் வீசி கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

## வேலையில்லா...

நாசம் கனவுகள் நாசம் உள்ளிட்ட பல்வேறு கோகங்களை அவர்கள் எழுப்பியிருத்தனர்.

மேலும் பல வருட கனவு வெறும் கனவாகவே போய் விடுமா, எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது, அழிக்காதே அழிக்காதே எமது எதிர் காலத்தை அழிக்காதே, வயது ஏறுது வாழ்க்கை போகுது வேலை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிய வாறு அவர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து நீண்ட காலமாக வேலையில்லாமல் தாம் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் பாதிப்புகளை சுட்டிக்காட்டி தமக்கான வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பினர்.

அதேபோன்று இந்தக் கோரிக்கை களை வலியுறுத்தி அரசியல்வாதிக ளுக்கும் அந்த மகஜரின் பிரதிகளை அனுப்பி வைக்க உள்ளதாகவும் பட்டதாரிகள் தெரிவித்தனர். (அ)

## ரணிலும்...

சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது நெருக்கமானவராக உள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேனவின் தரப்பினரால் சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், ரணில் - மைத்திரி சந்திப்பு தென்னிலங்கை அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## போலி ஆவணம்...

விமான நிலையத்துக்கு வந்துள்ளார்.

அவர்கள் கரும பீடத்துக்கு வந்த போது, அவர்களின் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தினால் அவர்களை விமான நிலையத்தில் உள்ள குடிவரவுத் திணைக் களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள் ளனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட தொழில் நுட்ப சோதனையின்போது அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த அதிகாரிகள் சிறுவனை, தனியே அழைத்துச் சென்று இவ்விடயம் தொடர்பில் விசாரித்தபோது இது தொடர்பான அனைத்துத் தகவல்க ளையும் இளைஞர் கூறியுள்ளதுடன், அவரின் உண்மையான தாய் அப்போதும் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் காத்திருப்ப தாகவும் அதிகாரிகளிடம் தெரிவித்துள் ளார்.

இதன்படி, உடனடியாக செயற்பட்ட அதிகாரிகள், அவரது தாயாரை தேடி கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டபோது, இலங்கையில் தற்போது நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியினால் தனது குடும்பம் கடும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அதனால் இளைஞனின் நலன் கருதி, இவ்வாறு வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல முயன்றதாகவும் கூறியுள்ளார் .

குறித்த பெண்கள் இருவரும் முல்லைத் தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநா யக்கா விமான நிலைய குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர் .

இந்த விசாரணைகளின்போது , இங்கிலாந்தை சேர்ந்த நபர் ஒருவர் தனது மனைவி மற்றும் மகனின் தகவல்களை வைத்து வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களை தயார் செய்து இலங்கை ஆண் பிள்ளைகளை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று ஆள் கடத்தல் தொழில் நடத்தி வருவ தாக தகவல்கள் வெளியாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## எரிக்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை தொடர்பான ஆலோசகராக உள்ளார்.

இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சொல்ஹெய்ம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடுவார். தொடர்ந்து பல்வேறு தரப்பினரையும் சந்திப்பார் என்று கூறப்படுகின்றது. அத்துடன், அவர் வடக்கின் பல இடங்களுக்கும் நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

மேலும், வடக்கில் முன்னெடுக்கப் படும் பசுமை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அவர் ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொதுஜன...

நடைபெற்ற நியூ அலையன்ஸ் கொழும்பு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் பக்மஹா விழாவின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்சிக்காக தாம் கடுமையாக உழைத்த போதிலும் இதுவரை கட்சியில் பொறுப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவளிப்பதாகவும் வேறு எந்த வேட்பாளரும் பார்வையில் இல்லை என வும் அவர் குறிப்பிட்டார். (அ)

## த. தே. கூ. ...

பாதிக்கப்பட்டிருந்த அவர் றொறன்றோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் காலமானார்.

*ஈழவேந்தன் கடந்த 2004ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர். தொடர்ச்சியாக 3 மாதங்கள் பாராளுமன்றத்துக்கு சமுகமளிக்காததால் 2007 நவம்பரில் அவர் பதவி இழந்தார்.*

*யாழ்ப்பாணம் - நல்லூரை பிறப்பிட மாகக் கொண்ட ஈழவேந்தனின் இயற் பெயர் கனகசபாபதி கனகேந்திரன் என்ப தாகும். தமிழ் மீதும் தமிழ்த் தேசியத்தின் மீதும் பெரும் பற்றுக்கொண்ட இவர் பின்னாளில் தனது பெயரை ஈழவேந்தன் என்று மாற்றிக் கொண்டார்.*

*இலங்கை மத்திய வங்கியில் பணி யாற்றிய இவர், பொருளாதார ஆய்வு திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாள ராக பணியாற்றி 1980ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.*

*இலங்கை தமிழ் அரசு கட்சியின் முக்கிய உறுப்பினரான இவர் 1970ஆம் ஆண்டு அந்தக் கட்சியை சேர்ந்த வி. நவரத்தினம் தமிழர் சுயாட்சி கழ கத்தை ஆரம்பித்தபோது அதில் இணைந் தார். மீண்டும் தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்த அவர், தமிழ் அரசு கட்சி தமிழர் விடுதலை கூட்டணியாக இயங்கியபோது அதன் கொழும்பு கிளையின் தலைவராக பணியாற்றினார்.*

*1977 கலவரத்தில் பாதிக்கப்பட்ட இவர் தமிழ் அரசு கட்சியை விட்டு விலகி தமிழீழ விடுதலை முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தார்.*

*1981 தமிழ்நாட்டுக்கு சென்று அங்கு வசித்தார். 1997இல் விடுதலைப் புலிக ளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைதாகி 2000ஆம் ஆண்டு விடுதலை யானார். சமாதான காலத்தில் தாயகம் திரும்பிய அவர் மீண்டும் தமிழ் அரசு கட்சியில் இணைந்து செயல்பட்டார். 2004 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களை வென்றபோது தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினரானார்.*

*2007இல் வெளிநாடு சென்ற அவர் 3 மாதங்கள் பாராளுமன்றுக்கு செல்லாத தால் உறுப்புரிமையை இழந்தார். வன்னி இறுதிப் போர் நடவடிக்கையால் நாடு திரும்பாத இவர், தொடர்ந்து புலம்பெயர் நாடான கனடாவிலேயே வசித்து வந் தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# மே தின கூட்டங்களில் ட்ரோன்கள் பறக்க தடை

கொழும்பு, ஏப். 30

அனுமதியின்றி மே தினக் கூட்டங் களை காணொலி பதிவு செய்ய ட்ரோன் களைப் பயன்படுத்துவது தடை செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு ட்ரோன்களைப் பயன்படுத்துவதற்கு அவசியமானால் அதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த சட்டம் நாடளாவிய ரீதியில் நடைபெறும் அனைத்து மே தினப் பேரணிகளுக்கும் பொருந்தும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# மதகுரு மீதும் அவரது மனைவி மீதும் பொலிஸ் உத்தியோகத்தர் தாக்குதல்

அநுராதபுரம், ஏப். 30

அநுராதபுரம், கலென்பிந்துனுவெவ பிரதேசத்திலுள்ள தேவாலயமொன்றின் மதகுருவையும் அவரது மனைவியையும் தாக்கியதாகக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தரும் அவரது நண்பரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கலென் பிந்துனுவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் குறித்த தேவாலயத்துக்குச் சென்றுள்ள நிலையில் பூஜை ஒன்று நடத்துவதற்கு வருமாறு அங்கிருந்த மதகுருவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த மதகுரு பூஜை நடத்தச் செல்ல மறுத்ததால் சந்தேகநபர் கள் இருவரும் அவரையும் அவரது மனை வியையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து பிரதேசவாசிகள் சந்தேகநபர்கள் இருவரையும் சுற்றிவளைத்துப் பிடித்து பொலிஸா ருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கலென்பிந்துனுவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

## நாட்டில்...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரச நிறுவ னங்களை மறுசீரமைக்கும் செயல்பா டுகளை மாத்திரம் அரசாங்கம் முன்னெ டுத்துள்ளது.உத்தேச மின்சார சபை மறு சீரமைப்பு சட்டமூலத்தில் பல குறை பாடுகள் காணப்படுகின்றன.

மின்சார சபையை 12 ஆக கூறுபடுத்தி அதன் உரிமத்தை தனியார் நிறுவனங் களுக்கு உரித்தாக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. நிறுவனங்கள் பெறும் இலாபத்துக்கு அமைய மின் கட்டணம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுவது பாரதூரமான நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

மின் சட்டத்தை திருத்தம் செய்வ துடன் மின் கட்டமைப்பில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்கு ழுவின் வகிபாகத்தை வரையறுப்பதற்கும் இச்சட்டமூலத்தில் உத்தேசிக்கப்பட் டுள்ளது. நியாயமற்ற வகையில் மின் கட்டணம் அதிகரிக்கப்படும் போது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதற்கு இடமளிக்காததால் ஆணைக் குழுவின் அதிகாரம் மட்டுப்படுத்தப் படவுள்ளது.

நாட்டின் மின் கட்டமைப்பை இருண்ட யுகத்துக்கு தள்ளும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்துக்கு அமைய செயல்பாடுகளை எதிர்வரும் நவம்பர் மாதமளவில் முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். சில வேளை ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அது அரசாங்கத்தை பொறுப்பேற்கும் தரப்புக்கு சவாலாக அமையும்.

உத்தேச மின்சார சபை மறுசீரமைப் புச் சட்டமூலத்தை நீதிமன்றில் சவாலுக் குட்படுத்துவோம்.ஆகவே, சட்டமூலத் திலுள்ள குறைகளை அரசாங்கம் திருத் திக் கொள்ள வேண்டும் - என்றார். (எ)

## ஜனாதிபதித்...

காலம் தேவை. தலைவர் பதவியைப் பெறப்போவதில்லை. பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஆலோசனைகள் மாத்திரமே வழங்குவேன்.- என்றார்.

இதேவேளை, நாட்டை இல்லாதொ ழித்த மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியையும் இல்லாதொழித்துள்ளார் என்றும் சந்திரிகா குற்றஞ்சாட்டினார்.

கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார். (எ)

## கடும் மின்னல்...

வீசக்கூடும் எனவும் வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக் குமாறு வளிமண்டலவியல் திணைக் களம் மக்களிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு - ஐயங்கன்குளம் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை இடி விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வாக்குறுதி...

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்திக்கும் வாக்களிக்குமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்ததாக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எந்தக் கட்சிக்கும் வாக்களிக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கவில்லை. இரா ஜாங்க அமைச்சர் தனது பாராளுமன்ற வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி தவ றான கருத்துகளைக் கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட் டோருக்கு நியாயத்தைப் பெற்றுக்கொ டுப்பதாக ரணில் விக்கிரமசிங்கவும் கோட்டாபய ராஜபக்ஷவும் உறுதிய ளித்தனர். ஆனால் இதுவரை குற்றவா ளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக் கப்படவில்லை. அவ்வாறெனின் எந்த அடிப்படையில் அரசாங்கம் மீது நாம் நம்பிக்கை வைக்க முடியும்? இதுவரை நீதி பெற்றுக்கொடுக்கப்படவில்லை. நாம் எத்தனை வருடங்களானாலும் நீதிக்காகப் போராடுவோம்.- என்றார். (எ)

ஈழநாடு
Eelanadu

# மற்றுமொரு கட்சி யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஏப். 30

ஐக்கிய மக்கள் கட்சி எனும் புதிய கட்சி யாழ்ப்பாணத்தில் இன்று முதல் ஆரம்பித்து வைக்கப்படுவதாக அப்பையா இராஜவேந்தன் என்பவர் தெரிவித்தார்.

தானே அந்த கட்சியின் உபதலைவர் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் புலேந்திரன் உதய குமார் என்பவரை தலைவராக கொண்டு கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நாம் வெகுஜன அமைப்பாகச் செயல் பட்டு வருகின்றோம் .

கல்வி, வாழ்வாதாரம், போரால் பாதிக்கப்பட்டோர் என பலதரப்பட்ட சேவைகளை நாம் செயற்படுத்தி வருகின்றோம். அதனடிப்படையில் இன்று முதல் எமது சேவைகளை ஐக்கிய மக்கள் கட்சி என்ற பெயரில் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம்.

எமது மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் இலங்கையின் அரசியல் அமைப்பிற்குட்பட்டு செயற்படுத்த இருக்கின்றோம்.

தற்போது எமக்கு தேர்தல் நோக்கமில்லை. இருந்தாலும் இது குறித்து தேர்தல் காலத்திலேயே இறுதி முடிவை எடுப்போம். இன, மத, மொழி வேறுபாடின்றி பலதரப்பட்ட மக்களுக்காகவும் இணைந்து செயற்படவுள்ளோம்.

தமிழ் இனம் சார்ந்த பிரச்னைகளுக்காக பல கட்சிகளும் குரல் கொடுத்து கெண்டிருக்கின்ற நிலையில் அந்த கட்சிகளின் கண்ணுக்கு புலப்படாத பொதுமக்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு சேவையாற்றுவது எமது நோக்கமாகும்-என்றார். (அ)

# குற்றவாளிகள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளை அம்பலப்படுத்துவோம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு,ஏப். 30

**“யுக்திய” செயல்திட்டத்துக்கு எதிராக போதைப் பொருள் கடத்தல்காரர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் தொடர்பில் வெளிப்படுத்தும் விசேட பிரசாரமொன்று இன்று செவ்வாய்க் கிழமையிலிருந்து ஆரம்பமாகவிருப்பதாகவும் எத்தகைய உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்படினும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குற்றவாளிகளை ஒழிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துச்செல்வதில் அமைச்சர் டிரான் அலஸ் உறுதியாக இருப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**




போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றவாளிகள், பாதாள உலகச் செயல்பாடுகளில் ஈடுபடும் கொலைகாரர்களைக் கொல்வது பாவம் அல்ல என கடந்த வாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் வெளியிடப்பட்ட கருத்தையடுத்து, அவர் பதவி விலகவேண்டும் எனவும், அன்றேல் அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தற்போது வெளிநாடு சென்றிருக்கும் நிலையில், இத்தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் அமைச்சர் டிரான் அலஸின் நிர்வாகக்குழு உயரதிகாரி ஒருவர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், சில சட்டத்தரணிகளுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக பெரும் கருத்து முரண்பாடு தோற்றம் பெற்றிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பிரபல சட்டத்தரணிகள் பலர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சார்பில் முன்னிலையாகி பல மில்லியன் ரூபாயைப் பெற்றிருப்பதாக கடந்த ஆண்டு செப்டெம்பர் 18 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் வெளியிடப்பட்ட கருத்தே இந்த முரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு “யுக்திய“ செயல்திட்டத்துக்கு எதிராக, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் தொடர்பில் வெளிப்படுத்தும் விசேட பிரசாரமொன்று இன்றைய தினத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. எத்தகைய உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்படினும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குற்றவாளிகளை ஒழிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துச்செல்வதில் அமைச்சர் டிரான் அலஸ் உறுதியாக இருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார். (எ)

# 49 இடங்களை சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் டயனா கமகே

கொழும்பு, ஏப். 30

சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக மேலும் 49 சுற்றுலாத் தலங்களை இனங்கண்டுள்ளதாகவும் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அவற்றை சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையில் இடம்பெறும் மோசடிகளையும், ஊழல்களையும் தடுப்பதற்கும் கண்காணிப்பதற்கும் தனியான குழுவொன்றை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே டயனா கமகே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கு நடக்கும் தொல்லைகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. நான் இது குறித்து குரல் எழுப்பி வருகின்றேன். சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்தல், சுற்றுலாத் தலங்களுக்கு செல்லக் கூடிய ரயில் பயணச்சீட்டுக்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல்.

இலங்கை தொடர்பில் பிரபல்யப்படுத்தி பிரசார வீடியோக்களை ஒளிபரப்பி வருகின்ற ஒரு சுற்றுலாப் பயணியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை போன்ற பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு ஒரு சிலரால் நமது நாட்டின் நற்பெயருக்கு பங்கம் ஏற்பட வழிவிடக்கூடாது. அதிக விலைக்கு ரயில் பயணச்சீட்டுக்களை விற்பனை செய்தல் தொடர்பில் குறிப்பிடுவதாயின் அவை பெரும்பாலும் ஊழல் மிக்க அதிகாரிகளின் ஆதரவுடனேயே இடம்பெறுகின்றன.

இவற்றைத் தடுப்பதற்காகவே ஒன்லைன் முறையில் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதை முறைமைப் படுத்தி வருகின்றோம். இம்முறையை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன் மூலம் இவ்வாறான ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்த முடியும்.




அதேபோன்று, சட்டவிரோத மது விற்பனையால் எமது நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான வரி வருமானம் இழக்கப்படுகின்றது. போயா தினத்தில் இந்நாட்டில் மது விற்பனை நிலையங்கள் மூடப்படுகின்றன.

ஆனால், அவ்வாறான தினங்களிலும் எமது நாட்டு மக்களே சட்ட விரோதமாக மது விற்பனை செய்கின்றனர். அவற்றைத் தடுக்கச் செல்லும் அதிகாரிகளும் இலஞ்சம் போன்ற ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு, அவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் திரும்பி வருகின்றனர். இவ்வாறு ஒரு சிலர் செய்யும் ஊழல் மோசடிகளால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்த முடியாமல் உள்ளது.

இவ்வாறான மோசடிகளைத் தடுக்கவும் கண்காணிக்கவும் தனியான குழுவென்றை நியமிக்க நான் பரிந்துரைத்துள்ளேன்.

சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக மேலும் 49 சுற்றுலாத் தலங்களை இனங்கண்டுள்ளோம். இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அவற்றை சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் வெளியிடவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன் ஊடாக எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம்.- என்றார். (எ)

# சம்பிக்கவை விசாரணைக்கு அழைத்தனர் சி. ஐ. டியினர்

கொழும்பு, ஏப். 30

பாட்டலி சம்பிக்க ரணவக்க எம். பியை குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை அவரை சி. ஐ. டி. பணிமனையில் முன்னிலையாகுமாறு அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர், அண்மையில் இரத்தினபுரி பகுதியில் ஆற்றிய உரையொன்றில் கூறிய விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

# பௌஸிக்கு எதிரான வழக்கு விசாரணை மே 22 ஆம் திகதி

கொழும்பு, ஏப். 30

முன்னாள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ. எச். எம். பௌஸிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை தீர்மானித்தது.

நெதர்லாந்து அரசாங்கம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்கிய ஜீப் வாகனத்தை தனது தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசாங்கத்துக்கு ஒரு மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நஷ்டத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதன்போது பிரதிவாதி பௌஸி நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சுகவீனமடைந்ததால் நேற்று நீதிமன்றத்துக்கு வரவில்லை என அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வில் ஜேக்ஸ் அதிரடி சதம்; ஆர். சி. பி. அபார வெற்றி

அகமதாபாத், ஏப். 30

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 45 ஆவது லீக் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணி அபார வெற்றி பெற்றது. வில் ஜேக்ஸ், 41 பந்துகளில் சதம் விளாசி ஆர். சி. பி. வெற்றி பெற உதவினார்.

இந்தப் போட்டி அகமதாபாத் நகரிலுள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடந்தது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது. இதன்படி குஜராத் டைட்டன்ஸ் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 200 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக சாய் சுதர்ஷன் 84, ஷாருக்கான் 58 மற்றும் டேவிட் மில்லர் 26 ஓட்டங்கள் எடுத்தனர். ஆர். சி. பி. பந்துவீச்சாளர்களில் சிராஜ், ஸ்வப்னில் சிங் மற்றும் மேக்ஸ்வெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆர். சி. பி. விரட்டியது. அணித் தலைவர் டூப்ளசிஸ் 12 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வில் ஜேக்ஸ் களத்துக்கு வந்தார். கோலி மற்றும் ஜேக்ஸ் இருவரும் இணைந்து குஜராத் பந்துவீச்சை துவம்சம் செய்தனர்.

16 ஓவர்களில் 206 ஓட்டங்கள் எடுத்தது ஆர். சி. பி. அணி. இதன் மூலம் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது ஆர். சி. பி. வில் ஜேக்ஸ் 41 பந்துகளில் சதம் விளாசினார். 5 பௌண்ட்ரிகள் மற்றும் 10 சிக்ஸர்களை அவர் விளாசினார். கோலி 44 பந்துகளில் 70 ஓட்டங்கள் எடுத்தார். குஜராத் அணியின் ரஷித் கான், மோஹித் சர்மா மற்றும் நூர் அகமது போன்ற பந்து வீச்சாளர்கள் அதிக ஓட்டங்கள் கொடுத்தனர். இந்த வெற்றி மூலம் 10 போட்டிகளில் விளையாடி 3 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது ஆர். சி. பி. அணி.




இந்த போட்டியில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய வில் ஜேக்ஸ் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார். ரஷித் கான் வீசிய 16 ஆவது ஓவரில் 29 ஓட்டங்கள் எடுத்தது ஆர். சி. பி. அணி. அதில் 28 ஓட்டங்களை வில் ஜேக்ஸ் குவித்தார். 6,6,4,6,6 என ஓட்டங்கள் எடுத்து அவர் சதம் கண்டார். அதே நேரத்தில் அணியையும் வெற்றி பெற வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# 134 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்களை இழந்து சென்னையிடம் சரணடைந்தது சன்ரைசர்ஸ்




சென்னை, ஏப். 30

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. ஹைதராபாத் அணி நாணயச்சுழற்சியில் வென்று பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சி. எஸ். கே. அணிக்கு அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் அஜிங்க்ய ரஹானே ஆரம்பம் கொடுத்தனர். இதில் ரஹானே 12 பந்துகளிலேயே 9 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஷபாஸ் அஹமதுவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய டேரி மிட்செல் நிதானமாக ஆடி ஏழு பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் என 32 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து களமிறங்கிய ஷிவம் துபே, ருதுராஜ் உடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நான்கு சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி என 20 பந்துகளில் 39 ஓட்டங் கள் எடுத்தார்.

அணித் தலைவர் ருதுராஜ் இந்த போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். மூன்று சிக்ஸர்கள், பத்து பௌண்ட்ரிகள் என விளாசி 98 ஓட்டங்கள் குவித்தார். சதம் அடித்திருக்க வேண்டிய நிலையில் 19.2 ஆவது ஓவரில் சிக்ஸர் அடிக்க முற்பட்டு ஆட்டமிழந்தார்.

இறுதி ஓவரில் இரசிகர்களின் ஆர்ப்பரிப்பின் இடையே களமிறங்கிய எம். எஸ். டோனி முதல் பந்திலேயே பௌண்ட்ரி அடித்து இரண்டு பந்துகளில் ஐந்து ஓட்டங்கள் எடுத்தார். 20 ஓவர்கள் முடிவில் சி. எஸ். கே. அணி 212 ஓட்டங்கள் குவித்திருந்தது. டோனி, துபே இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

213 ஓட்டங்கள் என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா களமிறங்கினர். அதிரடியாக துடுப்பெடுத்தாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட இருவருமே முறையே 13 மற்றும் 15 ஓட்டங்களில் வெளியேறினர்.

இம்பக்ட் வீரராக களமிறங்கிய அன்மோல்ப்ரீத் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். எய்டன் மார்க்ரம் அதிகபட்சமாக 26 பந்துகளில் 32 ஓட்டங்கள் எடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த உதவினார். எனினும் பத்தாவது ஓவரில் பத்திரண வீசிய பந்து விக்கெட்டை பதம் பார்த்தது.

அடுத்து களமிறங்கிய நிதிஷ் குமார் 15, கிளாசன் 20, அப்துல் சமாத் 19, ஷபாஸ் அஹமது 7, பேட் கம்மின்ஸ் 5, உனட்கட் ஒரு ஓட்டம் என அடுத்தடுத்து சொற்ப ஓட்டங்களில் விக்கெட்டுகள் விழவே 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது எஸ். ஆர். எச். அணி. 213 என்ற இலக்குடன் களமிறங்கிய சன்ரைசர்ஸ் அணி 134 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சி. எஸ். கே. அணி வெற்றி பெற்றது.

(எ)




# இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி

லாகூர், ஏப். 30

நியூஸிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்று வந்த 5 போட்டிகள் கொண்ட சர்வதேச ரி - 20 கிரிக்கெட் தொடர் 2 - 2 என்ற ஆட்டங்கள் அடிப்படையில் சமநிலையில் முடிவடைந்தது.

லாகூர், கடாபி விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடந்த தீர்மானம் மிக்க 5 ஆவதும் இறுதியுமான சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் 9 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரைச் சமப்படுத்தியது.

இப் போட்டியில் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் குவித்த அரைச் சதம், பக்கர் ஸமானின் சிறப்பான துடுப்பாட்டம், ஷஹீன் ஷா அப்ரிடியின் துல்லியமான பந்துவீச்சு என்பன பாகிஸ்தானின் வெற்றியில் முக்கிய பங்காற்றின.

முதலாவது போட்டி மழையால் கைவிடப்பட்டதுடன் 2 ஆவது போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. அடுத்த இரண்டு போட்டிகளில் நியூஸிலாந்து வெற்றிபெற்று 2 - 1 என்ற ஆட்டங்கள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

கடைசிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர் சய்ம் அயூப் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தபோதிலும் ஏனையவர்கள் திறமையாகத் துடுப்பெடுத்தாடி அணியின் மொத்த எண்ணிக்கைக்கு பலம் சேர்த்தனர்.

பாபர் அஸாம், உஸ்மான் கான் ஆகிய இருவரும் 2 ஆவது விக்கெட்டுக்கு 73 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை சிறந்த நிலையை நோக்கி நகர வைத்தனர். உஸ்மான் கான் 24 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

அதன் பின்னர் பாபர் அஸாம் மற்றொரு இணைப் பாட்டத்தில் பங்காற்றினார்.

பக்கர் ஸமானுடன் 3 ஆவது விக்கெட்டில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்த பாபர் அஸாம் 44 பந்துகளில் 69 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இப்திகார் அஹ்மத் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுடன் அவரைத் தொடர்ந்து பக்கர் ஸமான் 43 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

ஷதாப் கான் 15 ஓட்டங்களுடனும் இமாத் வசிம் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

நியூஸிலாந்து பந்துவீச்சில் ஐவர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 19. 2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

நியூஸிலாந்து துடுப்பாட்டத்தில் மூவர் மாத்திரம் 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

ஆரம்ப வீரர் டிம் சீஃபேர்ட் 33 பந்துகளில் 52 பந்துகளையும், அணித் தலைவர் மைக்கல் ப்றேஸ்வெல் 23 ஓட்டங்களையும் மத்திய வரிசையில் ஜொஷ் கிளாக்சன் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

மிகத் துல்லியமாக பந்துவீசிய ஷஹீன் ஷா அப்ரிடி 4 ஓவர்களில் 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் உஸாமா மிர் ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 4 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் பாகிஸ்தான் 8 பேரை பந்துவீச்சில் பயன்படுத்தியிருந்தது. இப்போட்டியில் ஆட்டநாயகன் விருதை ஷஹீன் ஷா அப்ரிடி பெற்றார்.

(எ)

# நைஜரில் அமெரிக்கா இராணுவம் விலகல்: மேற்கு ஆபிரிக்காவில் அமெரிக்கா பின்னடைவு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் (ECOWAS) வரலாறு முழுவதும், பிராந்திய மோதல்களாலும், உள்ளூர் சமூகங்களின் முரண்பாடுகளாலும், தங்கள் அபிவிருத்தி இலக்குகளை இழந்து வருகின்றனர். அத்துடன் அவர்களின் வளங்கள் அனைத்தும் உலக சக்திகளால், குறிப்பாக மேற்குலக நாடுகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது மேற்கு ஆபிரிக்க நாடுகள் ரஷ்யாவின் பக்கம் திரும்புவதுடன், மேற்கத்திய சக்திகளிடம் இருந்து விலகிச் செல்கின்றன. இதன் முதல் விளைவாக நைஜரில் இருந்து அமெரிக்கா தனது வீரர்களை திரும்பப் பெறுகிறது.




### நைஜரில் அமெரிக்கா துருப்புக்கள் வாபஸ்:

கடந்த ஜூலை 2023 முதல் இராணுவ ஆட்சியின் கீழ் உள்ள நைஜர் நாட்டிலிருந்து சுமார் 1,000 துருப்புக்களை வெளியேற்ற அமெரிக்க வெளியுறவுத்துறை ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்க துணை வெளிவிவகார அமைச்சர் கர்ட்காம்ப்பெல் மற்றும் நைஜர் பிரதம மந்திரி அலி மஹாமன்லாமைன் சைன் ஆகியோர் சந்தித்தனர்.

வாஷிங்டன் தனது துருப்புக்களை நைஜர் நாட்டிலிருந்து ஒழுங்கு மற்றும் பொறுப்புடன் திரும்பப் பெறத் திட்டமிடுவதைத் தொடங்க உறுதியளித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்கு ஆபிரிக்க நாட்டின் இராணுவ ஆட்சிக்குழுவின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது மார்ச் நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகளுடனான இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ரத்துசெய்தது.

முன்பு இந்த ஒப்பந்தம் அமெரிக்க துருப்புக்கள் மற்றும் அமெரிக்க பாதுகாப்புத் துறையின் சிவில் ஒப்பந்ததாரர்கள் நைஜர் நாட்டில் செயல்பட அனுமதித்தது.

மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் முயற்சி நடவடிக்கையை அமெரிக்க நிர்வாகம் தொடர்ந்து எடுத்ததாக வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு 110 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்ட அமெரிக்க விமானத்தளத்தின் நிலை குறித்தும் தற்போது கேள்வி எழுப்புகிறது.

ஆட்கள் மற்றும் ஆளில்லா கண்காணிப்பு விமானங்களுக்கு பாலைவன நகரமான அகாடெஸில் அமெரிக்கா ஒரு தளத்தை உருவாக்கியது. புர்கினா பாசோ மற்றும் மாலியை உள்ளடக்கிய சஹேல் பிராந்தியத்தில் அல்-கொய்தா மற்றும் ஆயுதக்குழுக்களுக்கு எதிராக நைஜரில் அமெரிக்கா இந்த இராணுவதளத்தை கட்டியது.



தலைநகர் நியாமியில் இருந்து சுமார் 920 கிமீ தொலைவில் உள்ள அகடெஸில் உள்ள முக்கிய விமானத்தளம் ஆட்கள் மற்றும் ஆளில்லா கண்காணிப்பு விமானங்கள் மற்றும் பிற செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

### அமெரிக்க இராணுவ ஒப்பந்தம் ரத்து:

ஏர் பேஸ் 201 என அறியப்படும் இத்தளம் அதிகமான செலவில் கட்டப்பட்டது. 2018 முதல், அல்-கொய்தாவின் துணை அமைப்பான ஜமாத் நுஸ்ரத் அல்-இஸ்லாம் வால் முஸ்லிமீனையும் (JNIM) குறிவைக்கப் பயன்படுத்தப்பட்டது.

அமெரிக்க அதிகாரிகள் அடுத்த வாரம் வருகை தருவார்கள் என்று நைஜர் அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. திரும்பப் பெறுவது குறித்து வெளியுறவுத் துறையிடமிருந்து எந்த பொது அறிவிப்பும் இல்லை மற்றும் அதிகாரிகள் இன்னும் காலக்கெடு எதுவும் அமைக்கப்படவில்லை என்று கூறினார்.

நைஜர் அரசு இந்த மார்ச் மாதம் தொடக்கம் அமெரிக்காவுடனான இராணுவ ஒப்பந்தத்தை இடை நிறுத்தியதாகவும், அதன் வீரர்களை திரும்பப் பெறுவதாகவும் அறிவித்தது. ஆளும் இராணுவத்தினாலோ அல்லது பிந்தைய காலனித்துவ சக்திகளை நிராகரிக்கும் மக்களாலோ அமெரிக்கா விரும்பப்படாததால் நைஜரில் இருந்துவெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

### அமெரிக்க எதிர்ப்பு போராட்டம்:

அதேவேளை அமெரிக்கப் படைகள் வெளியேறக் கோரி இந்த மாத தொடக்கத்தில் போராட்டக்காரர்கள் தலைநகரில் வீதிகளில் இறங்கினர். அண்டை நாடான மாலி மற்றும் புர்கினா பாசோவில் உள்ள இராணுவ ஆட்சியாளர்களைப் போலவே, மேற்கு ஆபிரிக்க நாடும் இராணுவம் கையகப்படுத்தியதைத் தொடர்ந்து பிரெஞ்சு மற்றும் ஐரோப்பிய துருப்புக்களை வெளியேற்றியது.




### சஹேல் பிராந்தியத்தில் ரஷ்யா

தனது பாதுகாப்பு உறவுகளை ஆழப்படுத்துவதால், நைஜருக்கு இராணுவ பயிற்சியாளர்கள் மற்றும் வான்பாதுகாப்பு அமைப்பு மற்றும் பிற இராணுவ உபகரணங்களை அனுப்பியுள்ளதாக இந்த மாததொடக்கத்தில் உறுதிப்படுத்தியது. சஹேல் பிராந்தியம் இப்போது ஆதரவு ரஷ்யாவை நோக்கி திரும்பியுள்ளது.




எண்ணெய் மற்றும் யுரேனியம் இருப்புக்கள் உட்பட இப்பிரதேசத்தின் மகத்தான இயற்கை வளங்கள், இப்பகுதிக்கு வெளிநாட்டு ஆர்வத்தை ஈர்க்கின்றன. சஹேல் பிராந்திய ECOWAS பிராந்திய ஸ்திரத்தன்மை பற் றிய கவலைகளால் உந்தப்பட்டதாகத் தோன்றினாலும், வளச்சுரண்டல் வெளி தரப்பினரால் எடுக்கப்படும் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

பனிப்போர் காலம் போன்று உலக வல்லரசு சக்திகளின் போட்டி உலகெங்கிலும் பிராந்திய மோதல்களை தொடர்ந்து தூண்டி, தீவிரப்படுத்தி வருகிறது. ப்ராக்ஸி




போர்கள், கருத்தியல் தகராறுகள் மற்றும் வளங்களைப் பின்தொடர்தல் ஆகியவை பல நாடுகளில் நீண்டகால உறுதியற்ற தன்மைக்கு வழிவகுத்தன.

ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட பலமோதல்களில், போட்டியிடும் குழுக்கள் உலகளாவிய சக்திகளால் ஆதரிக்கப்பட்டன. ஆனால் உள்ளூர் மக்களின் துன்பத்தை அதிகரித்தன என்பதே உண்மையாகும்.

### ரஷ்யாவுடன் உறவுகள் மேம்பாடு:

நைஜர் மற்றும் அதன் அண்டை நாடுகளின் வழியாக செல்லும் சஹேல் முன்பு இஸ்லாமிய பயங்கரவாதத்தின் முக்கிய இடமாக இருந்தது. கடந்த ஆண்டு ஆட்சி கவிழ்ப்பைத் தொடர்ந்து நைஜரில் தாக்குதல்கள் அதிகரித்தன.

ஜூலை 2023 ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன்னர், நைஜர் மேற்குலகின் கடைசி பங்காளியாகவும், பயங்கரவாதம் மற்றும் ஐரோப்பாவிற்கு இடம்பெயர்வதற்கு எதிரான போரில் கூட்டாளியாகவும் காணப்பட்டது.


ஆனால் தற்போது அண்டை நாடுகளான மாலி மற்றும் புர்கினா பாசோவும்வெஸ்ஸூக்கு எதிராக திரும்பி, ரஷ்யாவுடன் உறவுகளை மேம்படுத்தியுள்ளன. ஏப்ரல் தொடக்கத்தில், ரஷ்யா விமான எதிர்ப்பு அமைப்பு பயிற்சி பணியாளர்களை நைஜருக்கு அனுப்பியதும் அறிந்ததே. ●

# கவிஞர் அம்பி அவுஸ்திரேலியாவில் விடைபெற்றார்:

# குழந்தை இலக்கியத்திற்கு வளமூட்டிய கவிஞர்!

முருகபூபதி






அன்புக்கோர் அம்பி என அனைவராலும் விதந்து சொல்லப்பட்ட கவிஞர் அம்பி அவர்கள் கடந்த 27 ஆம் திகதி இரவு அவுஸ்திரேலியா சிட்னியில் தமது 95 ஆவது வயதில் மறைந்துவிட்டார்.

தன்னைப்பற்றிய பசுமையான நினைவுகளை எமக்குத் தந்துவிட்டு, விடைபெற்றிருக்கும் கவிஞர் அம்பி அவர்கள் இலங்கையில் வடபுலத்தில் நாவற்குழியில் 17-02-1929 ஆம் திகதி பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர், விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றினார்.

கொழும்பு கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் தமிழ் பாடநூல் ஆசிரியராகவும் பணியாற்றிய அம்பி, 1981 இல் பாப்புவா நியூகினி நாட்டிற்கு பணிநிமித்தம் சென்று அதன்பின்னர் 1992 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.

இளம் பராயத்திலிருந்தே கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அவர் அளப்பரிய பணிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் தமிழ்கூறும் நல்லுலகில் கவிஞர் என்றே அறியப்பட்டவர்.

ஏறினால் கட்டில் இறங்கினால் சக்கர நாற்காலி. இதுவே அவரது பல வருட வாழ்க்கையாகியிருந்தபோதிலும், தனது முதிய வயதிலும் மெய்நிகர் அரங்குகளில் தோன்றி கருத்துரைத்தார்.

அம்பி அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர். அத்துடன் இச்சங்கத்தின் மதிப்பார்ந்த காப்பாளராகவும் இருந்தவர்.

அம்பிக்கு 2004 ஆம் ஆண்டு 75 வயது பிறந்தபொழுது அதனை பவளவிழாவாக நாம் கன்பரா மாநிலத்தில் கொண்டாடினோம்.

அவருக்கு 90 வயது பிறந்ததும் சிட்னியில் கலை, இலக்கிய அன்பர்கள் இணைந்து 2019 இல் பெருவிழா எடுத்தனர்.

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கும் வளம் சேர்த்துள்ள அம்பியின் குழந்தைகளுக்கான கொஞ்சும் தமிழ் நூல் குறிப்பிடத்தகுந்தது.

குழந்தைகளை நாம் என்றென்றும் கொஞ்சிக் கொஞ்சித்தான் வளர்க்கின்றோம்.

“உலகில் நல்லவைகள் யாவும் குழந்தைகளுக்கே” என்று பல்லாண்டு காலத்திற்கு முன்னரே சோவியத் ருஷ்யாவின் சிற்பி மேதை லெனின் தெரிவித்தார்.

எழுதுவதற்கு மிகவும் சிரமமான இலக்கியம் எதுவென்று கேட்டால், குழந்தை இலக்கியம்தான் படைப்பதற்கு சிரமமானது எனச்சொல்வார்கள். அதில் உண்மை இருக்கிறது.

குழந்தைகளின் உளவியலைப்புரிந்து கொண்டால் தான் அது சாத்தியம்.

குழந்தை இலக்கியங்களை ஊக்குவித்து வளர்ப்பதற்காக யுனெஸ்கோ முதற்கொண்டு பல உலக அமைப்புகள் அன்று முதல் தீவிரமாக இயங்கிவருகின்றன.

கவிஞர் அம்பி, தமது ஆசிரியப்பணிக் காலத்திலேயே குழந்தை இலக்கியம் படைத்தவர். கொழும்பில் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் பாட நூலாசிரியராகவும் பணியாற்றியவர். அவருக்கிருந்த அனுபவத் தேர்ச்சியினால் சிட்னியில் தமிழ்ப்பாட நூல்கள் தயாரிக்கும் குழுவிலும் அங்கம்வகித்தார்.

எமது தமிழ்க் குழந்தைகளுக்காக அரைநூற்றாண்டுக்கு வருமுன்னர் மெல்பனில் மாவை நித்தியானந்தன் பாரதி பள்ளியை தொடக்கியபொழுது அங்கு வந்து அதனை முறைப்படி ஆரம்பித்துவைத்தவரும் அம்பி தான்.

அம்பி அவர்களை ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை என்று தமிழ்நாட்டில் முன்னர் வெளியான கோமல் சாமிநாதனின் சுபமங்களா இதழ் வர்ணித்திருக்கிறது.

கவிஞர் அம்பி எழுதிய கவிதைக்கு சென்னையில் நடந்த உலகத்தமிழராய்ச்சி மாநாட்டில் தங்கப்பதக்கமும் கிடைத்துள்ளது. அதனை வழங்கியவர் மக்கள் திலகம் எம். ஜி.ஆர்.




இன்றும் மானிப்பாயில் விளங்கும் கிறீன் மருத்துவமனையை ஸ்தாபித்த, அமெரிக்க மருத்துவ பாதிரியார் டொக்டர் கிறீன் பற்றிய ஆராய்ச்சி நூலை எழுதியமைக்காக இலங்கையில் அமெரிக்கத் தூதரகத்தால் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர் அம்பி. இலங்கை அரசு கிறீன் நினைவு அஞ்சல் தலை வெளியிடவும் அம்பி காரணமாக விளங்கியவர்.

பன்னூலாசிரியர் அம்பியின் யாழ் பாடி கவிதை நாடகத்தை அண்ணாவியார் இளைய பத்மநாதன் கூத்தாக அரங்காற்றுகை செய்துள்ளார். அத்துடன் அம்பியின் நள - தமயந்தி நாட்டிய நாடகத்தை நடன நர்த்தகி கார்த்திகா கணேசர் கொழும்பில் அரங்கேற்றியுள்ளார்.

மகாகவிபாரதி எழுதிய பல குழந்தை இலக்கியப் பாடல்கள் இன்றும் எமக்கு உவகையூட்டுகின்றன. அவற்றில் இடம்பெறும் எளிமையான வார்த்தைக் கோவைகள்தான் அதற்கு முக்கிய காரணம்.

அதுபோன்று கவிஞர் அம்பியும் எமது குழந்தைகளுக்காக எளியசொற்களையே பயன்படுத்தினார்.

கொஞ்சும் தமிழின் அழகும் அச்சிடப்பட்டிருக்கும் நேர்த்தியும் குறிப்பிடத்தகுந்தது.





கண்ணைக்கவர்தல், கருத்தை கவர்தல், மனதில் பதிதல், அதனால் நினைவில் நிற்றல் முதலான அம்சங்கள் தான் குழந்தை இலக்கியத்தின் சிறப்பு.

கொஞ்சும் தமிழ் - தமிழ்நாட்டில் மித்ர பதிப்பகத்தினால் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் ஓவியர்களை மித்ர பதிப்பகத்தின் எஸ்.பொ. தக்கமுறையில் இந்நூலுக்காக பயன்படுத்தியுள்ளார்.

அம்பி, தமது 90 வயதிற்குப்பின்னர் எழுதி முடித்த தொடர்: சொல்லாத கதைகள். தற்போது அமேசன் கிண்டிலில் மின்னூலாக படிக்கக் கிடைக்கிறது.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி தனது 95 ஆவது பிறந்த தினத்தை சிட்னியில் தமது இல்லத்தில், மக்கள், மருமக்கள் மற்றும் பேரக்குழந்தைகள் சகிதம் அமைதியாக கொண்டாடினார்.




நிறைவான வாழ்க்கை வாழ்ந்து விடைபெற்றிருக்கும் அம்பி அவர்களுக்கு சிரம்தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றோம்.

அம்பியின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது துணைவியார், மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

ஈழநாடு

# அமெரிக்காவை ஆட்டுவிக்கும் 'ரிக் ரொக்'

**சு. வெங்கடேஸ்வரன்**




தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மனித வாழ்க்கையை பல்வேறு நிலைகளில் மிகவும் இலகுவாக்கியுள்ளது. அதே நேரத்தில் இத்தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தும்போது பெரும் சிக்கல்களும் ஏற்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அந்த வகையில் இன்று நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நவீன தொழில்நுட்பத்தின் தலைப்பிள்ளையான சமூக ஊடகங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தகவல்கள், புகைப்படங்களை பரிமாறிக் கொள்வதில் தொடங்கி பல்வேறு தரப்பினரும் பணம் ஈட்டும் இடமாகவும் யூடியூப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் திகழ்கின்றன. அதே நேரத்தில் இதுபோன்ற செயலிகள் தேசிய அளவில் பிரச்னைகளை உருவாக்கும் இடமாகவும் திகழ்கின்றன.

அந்த வரிசையில் சீனாவின் டிக் டாக் செயலி அமெரிக்காவுக்கு பெரும் தலைவலியாக இப்போது உருவெடுத்துள்ளது. டிக் டாக் செயலி அதனைப் பயன்படுத்தும் அமெரிக்கர்களின் தனிப்பட்ட தகவல்களை திருடுகிறது. மேலும், சீன அரசுக்கு எதிரான தகவல்களை தங்கள் செயலியில் பரவவிடாமல் முடக்குகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆண்டு இறுதியில் நடைபெற இருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் சீனா தலையிட இச்செயலியைப் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்று அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு எச்சரித்துள்ளது.

இதன் காரணமாகவே அமெரிக்க நிறுவனத்திடம் டிக் டாக் செயலியை அதன் சீன உரிமையாளரான பைட்டான்ஸ் நிறுவனம் விற்றுவிட வேண்டும் அல்லது டிக் டாக் தடை செய்யப்படும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு அதிபர் ஜோ பைடனும் உடனடியாக கையொப்பமிட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இந்த விஷயத்தில் அமெரிக்காவைவிட இந்தியா முன்யோசனையுடன் நடந்து கொண்டது. கடந்த 2020-ஆம் ஆண்டே இந்தியாவில் டிக் டாக் உள்பட பல சீன செயலிகள் ஒரே நேரத்தில் தடை செய்யப்பட்டன. அப்போது இந்தியாவில் சுமார் 20 கோடி பேர் டிக் டாக் பயன்படுத்தி வந்தனர்.

இந்திய, சீன ராணுவ வீரர்கள் இடையே எல்லை மோதல் ஏற்பட்டு பலர்உயிரிழந்த நேரத்தில் நேரத்தில் டிக் டாக் தடை செய்யப்பட்டதால், இந்தியாவின் சிறப்பான பதிலடி நடவடிக்கையாகவும் அது கருதப்பட்டது. சீன செயலிகளை தடை செய்யும் அரசின் முடிவுக்கு மக்களின் ஆதரவும் இருந்தது. அப்போது இந்தியாவின் நடவடிக்கையை முதல் ஆளாக வரவேற்ற அமெரிக்கா, இப்போது தங்கள் நாட்டில் அதனைத் தடை செய்ய தயாராகி வருகிறது. இந்தோனேசியா பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பிரான்ஸ், டென்மார்க், கனடா, பெல்ஜியம் உள்ளிட்ட பல நாடுகளும் டிக் டாக் செயலிக்கு தடை, கட்டுப்பாடுகளை ஏற்கெனவே விதித்துள்ளன.

இந்தியாவுடன் ஒப்பிடும்போது அமெரிக்காவில் பேச்சு, கருத்து சுதந்திரத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே, இந்தியாவில் பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து சீன செயலிகளை ஒரே உத்தரவில் மத்திய அரசு தடை செய்ததுபோல அமெரிக்காவில் தடை செய்ய இயலவில்லை. அதற்கான சட்டவிதிமுறைகளைப் பின்பற்றியும், கால அவகாசம் கொடுத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

மறுபுறம் அமெரிக்க டிக் டாக் பயனாளர்கள் டிக் டாக் தடை செய்யப்படக் கூடாது என்று சமூக வலைதளங்களில் பிரசார இயக்கத்தையும் நடத்தி வருகின்றன. அமெரிக்க நிறுவனத்திடம் டிக் டாக் செயலியை விற்பது என்பது சாத்தியமற்றதாகவே உள்ளது. ஏனெனில், டிக் டாக் செயலியின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக உள்ள அதன் அல்கோரிதம் (தரவு பகுப்பாய்வு, தன்னியக்க சிந்தனை உள்ளிட்டவற்றின் தொகுப்பு) தொழில்நுட்பத்தையும் அமெரிக்க நிறுவனத்துக்கு விற்றாக வேண்டும்.

ஆனால், இந்த விற்பனைக்கு சீன அரசின் ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாகும். சீன அரசு இந்த ஒப்புதலை அளிக்கும் என்பதை எதிர்பாக்கவே முடியாது. ஏனெனில், இது அமெரிக்காவிடம் சரணடைவதற்கு ஒப்பானது என்றே சீன அரசு கருதும்.

இதுபோன்ற அரசியல் தொழில்நுட்பம் சார்ந்த சிக்கல் ஒருபுறம் என்றால் மறுபுறம் டிக் டாக்கை தடை செய்வது அமெரிக்காவில் பொருளாதாரரீதியாகவும் பலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், கைப்பேசி செயலிகளை நம்பி கடைவிரித்துள்ள பல அமெரிக்க சிறு தொழில் நிறுவனங்கள் டிக் டாக் செயலி மூலம்தான் பல நூறு கோடி வருவாய் ஈட்டி வருகின்றன.

சுமார் 34 கோடி மக்கள்தொகையைக் கொண்ட அமெரிக்காவில் 17 கோடி பேர் வரை டிக் டாக் பயன்படுத்துகிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் 24 வயதுக்கும், 89 சதவீதம் பேர் 45 வயதுக்கும் உள்பட்டவர்கள் ஆவர். அமெரிக்காவில் பல்வேறு பொருள்களை விளம்பரப்படுத்துவது, வாங்குவது, பயன்படுத்திவிட்டு கருத்து தெரிவிப்பது என பல்வேறு பொருளாதாரச் செயல்பாடுகளிலும் டிக் டாக் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

டிக் டாக்கின் மற்றொரு வடிவமான லெமன்8 செயலியும் அமெரிக்க சமூக வலைதள பயனாளிகள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அந்நாட்டில் தங்கும் விடுதிகள், உணவு, பேஷன் பொருள்கள், நவீன ஆடைகள் விற்பனை, சுற்றுலா என பல்வேறு துறைகளில் லெமன்8 ஆதிக்கம் செலுத்தி வருகிறது. டிக் டாக் தடை செய்யப்படும்போது இந்த செயலியும் வெளியேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

அமெரிக்க நிறுவனங்களின் யூடியூப் சார்ட்ஸ், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் ஆகியவற்றைவிட டிக் டாக் அமெரிக்காவில் மக்களை வெகுவாகக் கவர்ந்த, அதிகம் பயன்படுத்தப்படும் செயலியாக உள்ளது.

எனவே, டிக் டாக் செயலியின் தடை அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க மக்களின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. இது இளைஞர்கள் மத்தியில் அரசு குறித்த அதிருப்தியையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்க அரசின் முடிவை எடுத்து சட்டப் போராட்டத்துக்கு டிக் டாக் தயாராகி வருகிறது. தங்களைத் தவிர மற்ற யாரிடமும் சிறந்த தொழில்நுட்பம் இருக்கக் கூடாது என்ற அமெரிக்காவின் எண்ணத்தின் காரணமாகவே டிக் டாக்கை அபகரிக்க முயற்சிப்பதாக அந்நிறுவனம் குற்றம்சாட்டியுள்ளது. இந்த விவகாரம் அமெரிக்கா-சீனா இடையிலான மற்றொரு பனிப் போராக உருவெடுத்துள்ளது.

